புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலையம்.

பிரசுரம்]　　**1941**-ம் ௵ ஜனவரி ௴ **18**௳　　[ந. **27.**

பிரஸங்கம் **XXVII.**

## ஒரு யுத்த விமரிசனம்.

**நா**ம் இன்று செய்யப்போவதை சுமார் நாலு மாதங்களிற்கு முன் உலகத்தில் பெயர் பெற்ற பத்திரிகைகளெல்லாம் செய்தன. இந்தப் போரின் முதல் வருஷத்தில் நடைபெற்றவைகளைப்பற்றிக் கணக்கெடுத்தார்கள்; ஆனால் நமக்கிருக்கும் பாக்கியம் அவர்களுக்கில்லை. பிரிடனுக்காகப் போர் புரிபட்டுக் கொண்டிருக்கும் போதே அவர்கள் சர்ச்சை செய்யவேண்டியிருந்தது. போரும் ஒரு தரம் முடிவடைந்து மறுமுறை கிளம்பி மும்மரமாக நடந்துகொண்டிருந்தது. வெகு பிரசாரம் செய்து பூச்சாண்டி பூச்சாண்டி என்று பயங்காட்டப்பட்ட "குறடா வேலை" யானது கணக்கெடுப்பதில் ஒரு சிக்கலாகக் காணப்பட்டது. ஸ்வதந்திர நிலையங்களெல்லாம் தீப்பற்றித் தத்தளிக்கும்போது, தலைவர் தேர்தல் விஷயமாக அமெரிக்கர்கள் (அமெரிக்க கவர்ன்மெண்டாரல்ல) பரபரப்பாயிருந்தார்கள்; ஒரு காலத்தில் நம்முடன் நேசமாயிருந்த தேசத்தார் ஒருவாறு விரோதிகளாகி விடுவார்களோவென்ற சந்தேகமுமிருந்தது.

கொஞ்சம் பரிகாசமாகப் பேசுவதை மன்னிப்பீர்களானால் நாம் கணக்கெடுக்கும் இச்சமயம் விடுமுறை நாள். லிபியாவிலும் (Libya) அல்பேனியாவிலும் நடைபெறும், இரண்டாம் பக்ஷமானாலும், வெகு முக்கியமான யுத்தமொன்று நீங்கலாக, பெரிய காரியங்களின் பிரயோகம் கொஞ்சம் மட்டுப்பட்டிருக்கிறது; மறுபடியும் யுத்த சன்னாகங்கள் கிளம்புமுன் "அப்பொழுது" என்றும், "இப்பொழுது" என்றும் பெயரிட்டு இரண்டு படங்கள் வரைய சாவகாசம் இருக்கிறது.

அவ்வப்போது நடைபெற்ற சம்பவங்களை வைத்து கோர்வையுண்டோ இல்லையோ, சம்பந்தப்பட்ட சில விஷயங்களைப்பற்றி இந்தப் பத்திரிகை மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் இப்போது ஆறுமாத காலமாகப் புகட்டி, வந்திருக்கிறோம் என்ற காரணத்தாலும், கணக்கெடுக்க இத்தருவாயை எடுத்துக் கொள்ளுகிறோம். நடந்த சம்பவங்களால் விளைந்த பயன்களைப்பற்றி சுருக்கமாகச்சொல்லி அடுத்துவரும் எதிர்காலத்தில் விளையக்கூடியதென்னவென்பதைப் பற்றிக் குறிப்பிட்டால் இதைப் படிப்பவர் கேட்பவர்களுக்குத் திருப்தியாகவிருக்கும் என்று நினைக்கிறோம்.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் யுத்தத்தைப்பற்றி உண்மை விஷயங்கள் பரவும்படிச் செய்யும் வேலையை நாங்கள் ஏற்றுக்கொண்ட காலத்தில் இருந்ததைக் காட்டிலும் யுத்தத்தின் போக்கு திருப்திகரமாகவிருக்கிறதென்று நன்றியுடன் நாம் தவக்கமின்றிச் சொல்லுவோம். மன்னரிடம், மகாராஜாவிடமும், இந்தியா கவர்ன்மெண்டாரிடமும், மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியிடமும் விசுவாசம், பிரிடிஷ் சாம்ராஜ்ய போர் முயற்சியில் ஒத்துழைப்பு, உண்மை தீரத்திற்கு ஒப்பான மனமார்ந்த நம்பிக்கை, இவைகளெல்லாம் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பல மாதங்களாகப் பிரதிவாரமும் ஸமஸ்தானம் முழுதும் நடைநடந்தோம். அதுவும் சொல்லவும் மெல்லவும் சாரமான பண்டம் வெகு சொற்பமாக விருந்த சமயம். இன்றைக்கோ வெற்றியின் பலனை அனுபவிக்க ஆரம்பிக்கிறோம். பார்டியா (Bardia)வில் இதாலியர்கொடி கீழே விழுந்து, பிரிடிஷ் ஐக்கியக்கொடி நேற்று நாட்டப்பட்டதால் மட்டும் அப்படிச்சொல்லவில்லை. சென்ற ஜூலை மாதம் இந்த யுத்த சமாசார நிலையம் உண்டான சமயம் சட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த கடுகடுப்பான படத்தை இறக்கிவிட்டு இன்று மாட்டப்போகிற படத்தில், லிபியா (Libya)வில், தளகர்த்தர் வேவல் (General Wavell) நடத்திவரும் மகிமைதங்கிய யுத்த காரியங்கள் கேவலம் ஒரு அம்சம் மட்டுமே.

## முகவுரை.

இன்னும் கொஞ்சம் முன்னாலேயிருந்தே துவக்கவேணும். உலக சரித்திரத்திலேயே மகத்தான இந்த யுத்தம் எப்படி ஏற்பட்டதென்று உங்களெல்லோருக்கும் தெரியும். சுதந்திர நகரான டான்ஸிக் (Danzig)-கில் நாஸிகள் அடங்காத ஆட்டம் போட்டதும், போலண்ட் (Poland) இடம் ஹிட்லர் கொண்டாடின அடாத பாத்தியங்களும் யுத்தத்திற்கு அடுத்து முந்திய காரணங்கள். ஆனால் ஜெர்மானியர் ரீதியாக யுத்தமானது அதற்கு முன்னமேயே ஆரம்பமாகி ஜயத்துடன் முடிவும் அடைந்து விட்டது. ரூர் (Ruhr)-ஐ ஜெர்மானியர் வியாபித்துக்கொண்டபொழுதும், ஆஸ்திரியா (Austria)-வை வசமாக்கிக்கொண்டபொழுதும், ஸெக்கோஸ்லோவாகியா (Czechoslovakia) பேரில் படையெடுத்து பிடித்துக்கொண்டபொழுதும், அபகீர்த்தியடைந்த "புது முறை" வந்து விட்டதாகவே கருதினார்கள். பற்பல தேசங்களிலிருந்து வந்துபார்த்தவர்கள் உலக பத்திரிகைகளில் வருஷக்கணக்காக பறை சாத்திக்கொண்டிருந்த உண்மையான நடப்புகளை மட்டும், ஆங்கில கவர்ன்மெண்டாரும் பிரெஞ்சு கவர்ன்மெண்டாரும்,

அக்காலத்திய ராஜதந்திர நிபுணர்களும் சரிவர அறிந்திருந்தால், சட்ட சபைகளில் கட்சி வலுத்தவர்கள் "அபேதவாதம் நீங்கலாக எதுவானாலும் சரி" என்று உளறுதல் "சேர்மான பாதுகாப்பு" "சமாதானப்படுத்துவது" என்ற பண்ட மற்ற எட்டுச்சுரைக்காய்போன்ற கொள்கைகள், இவைகளைக்கொண்டு திருப்தி யடைந்து உலகமே அழியும்படிசெய்த காட்சியும் பதுங்கிக்கிடக்கும் விரோதிகள் யுத்த ஆயத்தமாய்க்கொண்டிருக்கும்போது, நிராயுத நிலையை பரீக்ஷைபார்ப்பது, அபிஸீனியா அழிந்ததும், மியூனிக்(Munich)-கில் நடந்த அசந்தர்ப்பத்திற்குப் பின்னும், சர்வதேசசங்கம் தலைகுப்புற விழுந்து மனுஷ்யத்தனம், கண்யம் எல்லாம் சீர் குலைந்து கிடப்பது, இவைபோன்ற கஷ்ட நிலையை நாம் காணுதிருக்கலாம். இந்த கஷ்டமெல்லாம் நமக்கு நேராமல் தடுக்கப்படவில்லை; ஜனநாயக நாடுகளும் அவைகளிலுள்ள ராஜதந்திரிகளும் கண்ணிருந்தும் சின்னங்களை கவனியாமல் கண் மூடித்தனமாக விருந்தார்கள்; அதன் பலன், இப்போது எல்லா தேசங்களும் போரில் மாட்டிச்கொண்டன, அல்லது மாட்டிக்கொள்ளக்கூடிய ஸ்திதியில் இருக்கின்றன.

## முதல் மாரிகால ஓய்வு.

இப்போர்க்கொத்த யுத்தத்தைப் பற்றித்தான் நாம் இப்போது கணக்கெடுக் கிறோம்; இந்த யுத்த நிலயம் ஏற்படுமுன் நடந்த காரியங்களைப்பற்றி நாம் பேச வேண்டியிருந்தபோதிலும், அந்த நடவடிக்கைகள் நடந்து ரொம்ப நாட்கள் ஆகவுமில்லை. ஏனென்றால், 1939-ல் தோல்வியடையுமுன் ஒரு மாதம்வரை மனதை உருக்கக்கூடிய தைரியத்துடன் போலண்ட் (Poland) போர்புரிந்து, நார்வே (Norway) துரோகத்திற்குள்ளாகி விழுந்து, அதன் பயனுக பிரிடிஷ் சைன்யங்கள் பின் வாங்கிய பின்னும், (சங்கிரகமாகச் சொல்லுவதானல்) "மேளங் கொட்டுமுன்" ஆறு மாதகாலம் காற்று அடங்கியிருந்தது. வெகு நாட்களுக்கு முன்னமேயே துவக்கியிருக்கவேண்டிய தயாரிப்புகளை பிரிடன் அத்தருவாயில் செய்யத்தொடங்கிற்று. பிரான்ஸில் கோடாலிக்காம்புகள் வலுவடைந்து கொண்டிருக்கும்போது, பிரெஞ்சு சைன்யம் மாஜ்ஜினே (Maginot) அரணின் சந்நத்தமாய் வந்தார்கள்; மேற்கு கோளத்தில் கிரீன்லண்டை (Greenland)ப் பற்றி இஸ்தியார் பிறப்பிவிப்பது, தென் அமெரிக்க குடியரசு நாடுகளுக்கு "மன்ரோ கொள்கை" (Munro Doctrine) அன்வயிக்கும் என்பது முதலான யுக்திகள் மூலம் தேர்தல் சம்பந்தமாக தேசத்தின் அபிப்பிராயத்தை Mr. ரூஸ்வெல்ட் (Mr. Roosevelt) அறிந்தார்; ஐரோப்பாவின் எல்லைப்புறத்தி லிருந்த நடுநிலைமை தேசங்கள், இந்த வியாபார உடன்படிக்கை நலம், வலியக்க வம்புக்கு போவதில்லையென்ற அந்த உடன்படிக்கை உயர்வு, என்ற விதமாக பாசாங்குப்பேச்சுப்பேசி அச்சு தேசத்தாரிடம் கும்பிட்டு விழுந்து கொண்டி ருந்தார்கள். இதெல்லாம், பசியெடுத்து இரை தேடித்திரியும் ஓநாயுடன் வெவ் வேறு கோழிக்கூடுகளில் இறக்கை முளைக்காத சிறு குஞ்சுகள் ஒப்பந்தம் பேசிக் கையெழுத்து செய்வது போலிருந்தது. இதெல்லாம் நடந்தது; அதன் பின் வந்தது, பிரளயம்.

## பெரிய எதிர்ப்பு.

1940 ஏப்ரல் கடைசியில் உலாந்தாவிலும், பெல்ஜியத்திலும் த்வஜாரோகணம். சமத்காரமாக சைனிய சஞ்சாரங்கள் பல திக்குகளில் செய்யச்செய்து பாசாங்கு பண்ணியிருந்ததால் எந்தப்பக்கத்தில் எதிர்ப்பான் என்று நிர்ணயிக்க முடியாமலிருந்தது. மூட்டம் போட்டுக்கொண்டிருந்த ஆகாயத்தைக் கவனித்துக் கொண்டிருந்து மேற்படி நாடுகள் பிரவாகத்தில் அடித்துக்கொண்டு போகப் பட்டன. லண்டனிலுள்ள "டைம்ஸ்" (Times) பத்திரிகை சொன்ன பிரகாரம் ஜெர்மானியரின் யந்திர பூர்வமான எதிர்ப்பானது ஒரு மகத்தான அறிவாள் போல பிரான்ஸ் தேசத்திய பெரிய சைனியங்களை வெட்டிச்சாய்த்து, தனிப் படுத்தப்பட்ட பிரிடிஷ் துருப்புகளை கடற்கரைக்குப் பிடித்துத்தள்ளி, சண்டை முடிந்தவுடன் கொஞ்சமும் சிரமமன்னியில் தஞ்சமடைந்த தகர்க்க முடியாத மாஜினோ (Maginot) அரணை அலக்ஷியமாய் விட்டுச்சென்றது; மூன்று வாரம் மும்மரமாய் நடந்த சண்டையின் இறுதியில் கண்யம்வாய்ந்த அந்தக் குடியரசு நாடானது தரையில் இழுபட்டுக் கிடந்தது.

## முதல் விபத்து.

பிரிடிஷாராயில்லாமல் வேறு எந்த தேசத்தாராயிருந்தாலும், முக்கியஸ்தரான ஒரு நேச தேசத்தாரை இழந்ததோடு மட்டுமல்லாமல், தங்கள் யுத்த ஏற்பாடுகளெல்லாம் தட்டுக்கெட்டுத் தடுமாறும்படி செய்த இப்பெரிய விபத்தைக் கண்டு பிரமித்துப்போய், உடன் காலத்திலேயே விழுந்து, படுத்துப் போயிருப்பார்கள். டங்கர்க் (Dunkirk) சம்பவம் நடந்த உடன் காலத்திலேயே ஹிட்லர் இந்த யுத்தத்தில் தோல்வியடைந்து விட்டாரென்று நம்பிக்கையுடன் எனது சிநேகிதர் ஒருவர் தன் திடமான நம்பிக்கையென்று என்னிடம் சில நாட்களுக்கு முன் சொன்னார். ஆம், இருக்கலாம், ஏனென்றால், அந்த அத்தியாச்சரியமான யுத்த தந்திரம் நடக்குமுன், தடுக்கமுடியாத தோல்வி பிரிடிஷாரை ஒரு க்ஷண மாத்திரம் நெருங்கி வந்ததுண்டு. இதைக் கவனிக்க, ஹிட்லர் இப்போரில் வெற்றியடையும்படியான சமயம் ஒரே தரம் வாய்த்து, அந்த சந்தர்ப்பத்தையும் இழந்தான் என்பது உண்மையாயிருக்கலாம். உலகத்திலுள்ள சைனியங்களில் வெகு நன்றாய்த் தயாரிக்கப்பட்டதும், பிரிடிஷ் ராணுவப்படையின் மணி போன்றதுமான 3-லக்ஷம் பெயர்கொண்ட படை எந்த சமயம் எதிரியிடம் சரண் அடைகிறதோவென்று பிரிடன் பிரதம மந்திரி ஜனங்களுக்கு எச்சரிக்க வேண்டியதாக விருந்ததுண்டு. 30,000 பெயர் தப்பிப்பதே தம்பிரான் புண்ணியமென்று எண்ணினோம். உண்மையிலோ, அத்தியாச்சரியமான ஒத்துழைப்பாலும், நெஞ்சுரத்தாலும் முதலில் கண்டதொகைக்கு மேற்பட்டே துருப்புகள் தப்பித்து பிரிடன் வந்து சேர்ந்து, மறுமுறையும் போர்புரியும்படி நேர்ந்தது. இந்த யுத்தத்தின் உருவத்தையே மாற்றின மூன்று சம்பவங்களில் அது ஒன்று. ஜெர்மானியர் பெற்ற வெற்றியானது அவர்கள் பக்கம் முஸோலினியைப் போய்ச்சேரும்படி செய்யும் தன்மைகொண்ட மகத்தான வெற்றியாகவிருந்த போதிலும் மேலேசொன்னது நடப்பு.

## இரண்டாவது விபத்து.

இரண்டாவது சம்பவம் பின்னால் நேர்ந்தது. பிரிடனைப் பாதுகாக்க சேகரிக்கப்பட்ட என்றுமில்லாத சங்கியையுள்ள சைனியத்திற்கு ஜீவனானது டங்கர்க் (Dunkirk)கிலிருந்து வந்த இந்த சைனியம்; தனது முக்கிய விரோதியான பிரிடன்பேரில் படையெடுத்து யுத்தத்தை முடித்துவிடுவதாகத் தீர்மானம் செய்ததால், பாதுகாப்பு என்பது பிரிடனுக்கு ஒரு நாளுமில்லாத பிரத்யேகமான கடமையாகிற்று. வெகு ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட ஜெர்மானிய விமானப்படை பிரிடன் பேரில் சஞ்சாரம் செய்யக்கிளம்பின; தோற்கடிக்கப்பட்ட பிரெஞ்சுத் துறைமுகங்களில் பிரிடனை எதிர்க்க ஜெர்மன் படைகள் கூட்டப்பட்டன; மத்தியதரைக்கடலில் இதாலிய -"யூ போட்." (U-boat) என்ற படகுகளால் வரும் விபத்தைத் தடுப்பதும், ஜப்பான் பக்கமிருந்து சிங்கப்பூருக்கு நேரக்கூடிய அபாயத்தைத் தடுப்பதுமான அவசர ஜோலிகளைப்பார்க்க இங்குமங்குமாகப் பரவியிருந்த பிரிடிஷ் கப்பற்படையை முடிந்தவரை பார்க்கலாமென்ற நோக்கத்துடன் எதிரி படைகளடங்கிய கப்பல்களும் படகுகளும் வேகமுள்ள மோட்டார் யந்திரபடகுகளும் நார்வே (Norway)யிலிருந்து பிஸ்கே குடா (Bay of Biscay)வரையிலுள்ள பிரிடனுக்குச் சமீபமான எல்லாத் துறைமுகங்களுக்கும் திருட்டுத்தனமாகப் போகத்தொடங்கின. நடந்ததை சுருக்கமாக சொல்லிவிடலாம். மே மாதத்தில் நேர்ந்ததுபோல் பிரிடனுக்கு ஆபத்தான நேரம் விரைவில் விலகியது. மேற்சொன்ன கப்பல்களும், படகுகளும் புறப்படவில்லை; ஒருவாறு புறப்பட்டாலும், அவைகள் குண்டுகளால் தாக்கப்பட்டு தீப்பற்றி எரியும்படி செய்யப்பட்டு, அதிலிருந்த மனிதர்கள் வெந்ததும் வேகாததுமாக மீன்களுக்கு இரையாக்கப்பட்டார்கள். இதற்குக் காரணமென்னவென்றால், ஜெர்மானியர் யோசனை நிறைவேறுவதற்குப் பூர்வமான விமான வெற்றி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. வெகு குறைந்த சங்கியையுள்ளவர்களான போதிலும், ஜெர்மன் விமானப்படையின் யோக்கியதையை அதுவரை பரிக்ஷை பார்க்கப்படாத பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்தவர்கள் செம்மையாய் அறிந்து ஜெர்மானியர் படையெடுப்பு ஏற்பாட்டை சிதற அடித்துவிட்டார்கள். ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பிரிடிஷ் விமானிகள் ஜெர்மன் முன்னணி விமானங்களில் 3,000 விமானங்களுக்கு மேலேயே நாசமாக்கி, மாற்றமுடியாத முக்கிய விமானிகளில் ஒன்பதினாயிரம்வரை கொன்றதுடன், கால்வாய் பக்கமுள்ள துறைமுகங்களில் வெற்றிவிருப்பு அடைந்த ஜெர்மன் துருப்புகளை தாங்கமுடியாமல், புறப்பாட்டுத் தயாரிப்புகளில் கலந்துகொள்வதைக்காட்டிலும் அடங்காப்பிடாரிகளை அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலை வாசம் விசேஷம் என்று நினைக்கும் விதமாக அந்தத் துறைமுகங்களிற்குச்சென்று அமர்க்களம் செய்தார்கள்.

## இரண்டாவது ஓய்வு.

இந்த ஸ்திதியில் ஹிட்லர் இரண்டாம் முறையும் தாமதிக்கவேண்டியதாய்ப் போய்விட்டது; அப்படி அவன் தாமதித்த சமயம், பிரிடன் கடைசியாக வெற்றி பெறவேண்டியதற்கு அனுகுணமாக சில காரியங்கள் முளைக்க ஆரம்பித்தன.

அச்சமயம்தான் இந்த நிலையத்தைச் சேர்ந்த நாங்கள் எங்கள் ஆசையைமட்டும் வைத்துப்பேசாமல் எங்கள் நம்பிக்கையின்பேரில் பேசத்தொடங்கினோம்; அப்போதுதான், சாம்ராஜ்யமும், இந்தியாவும் தப்பிப்பிழைக்கவேண்டி போர் வெற்றியாக முடியவேணும் என்பதை முக்கியமாகச் சொல்லாமல், மனிதரின் சரீர சுதந்திரம், மனிதரின் எண்ணம், மதம், இன்னும் உயிர் வாழ்க்கையின் பெருமைக்கு அவசியமான விஷயங்கள் எல்லாவற்றையும் உத்தேசித்து, ஒவ்வொரு நேர்மையான மனிதனின் ஆதரவும் அனுதாபமுமிருந்தால் இந்தப்போர் நமக்கு வெற்றியாகவே முடியும் என்று சபையோர்களுக்குச் சொல்ல முடிந்தது. ஏனென்றால், இந்த நிர்ப்பந்தமான தாமத காலத்தில் தான், பிரிடிஷ் சாம்ராஜ்யமும் அதன் சஞ்சார விஸ்தாரம் ஜாஸ்தியாகயிருந்தபோதிலும், யுத்தத்திற்கு லாயக்காயிற்று; நம்மள் சார்பாக அமெரிக்கரின் அனுதாபம் வலுக்க ஆரம்பித்தது; சுதந்திர பிரெஞ்சு இயக்கம் என்ற முக்கியமான இயக்கம் உள்பட எல்லாம் இனிமையாக முடியுமென்ற எண்ணங்களுக்கு புத்துயிர், அழிக்கப்பட்ட ஐந்தாறு நாடுகளில் உண்டாயிற்று; எல்லாவற்றிலும் மேலாக, யுத்ததளவாட தயாரிப்பு என்ற அடிப்படையான விஷயத்தில் பிரிடனின் திட சித்தம் பொருந்திய பிரதம மந்திரியும் கவர்ன்மெண்டும் ஈடு பட்டது.

## ராஜீய மின்னல்.

இப்படி யிருந்தும் எல்லாம் திருப்திகரமாக இருந்ததென்று சொல்ல முடியாது. ஜெர்மனியில் கைத் தொழில் நிலையங்களைப் பலமாகத் தாக்கினதுபோக நமது எதிரியை நாம் ரொம்ப பாடு படுத்த முடியவில்லை. நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தது சாவகாசம், அதாவது கப்பல் வகையறுக்கள் கட்ட போதுமான சாவகாசம், தளவாடங்கள் தயாரிக்க சாவகாசம், ஆயுத பாணிகளாக சாவகாசம், சாமான்கள் வருத்த சாவகாசம். ஹிட்லரோவென்றால், பிரயோஜனமா யிருக்கக் கூடிய நடு நிலைமை தேசத்தார்களைப் பயமுறுத்தவும், அவசியமானால், கட்டாயப் படுத்தவும் கூடிய பலமுடைத்தாயிருந்தான். பெயர் போன கொறடா வேலை, பிரிடனைச் சரணடையச் செய்ய முடியாத போனாலும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் காலை முறிக்கக்கூடிய விதமாக எகிப்தையும், ஸூயஸ் கால்வாயையும் தாக்க வேண்டிய தென்ற யோசனை யெல்லாம் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வந்தது. வட ஆபிரிக்காவில் கிரேஸியானி (Graziani) வலுவான படைகள் வைத்திருந்தார்; மத்தியதரைக் கடலின் ஓரத்தில், லிவாண்ட் அதிகாரம் பெற்ற அரசியல்களை இதாலி பயங்காட்டிக் கொண்டிருந்தது; மத்தியதரைக் கடலின் வடக்கே பால்கன் நாடுகளில் ருமேனியா விழுந்து படுத்தது; யூகோ-ஸ்லாவியா ஜெர்மனியின் பலமான நிர்ப்பந்தத்திற்கு ஆளாயிற்று; ஹங்கேரியை ஜெர்மனி ஒரே விழுங்காய் விழுங்கி விட்டது; ரஷியாவினிடம் பயத்தாலும் நம்பிக்கையாலும் துருக்கி கைக்கட்டு கட்டப்பட்டிருந்தது; அதே சமுத்திரத்தின் மேல் ஓரத்தில் அச்சு தேசத்தாருடன் சேரும்படி ஸ்பெயின் நெருக்கப்பட்டு வந்தது; பிரெஞ்சு கப்பற் படையில் பாக்கியுள்ளதையும், பிரெஞ்சு மத்தியதரைக் கடல் துறைமுகங்களையும் பலாத்காரமாகப் பிடித்துக் கொள்ளுவ தென்றால், யோக்கியப் பொறுப்

பானதோ, யோக்கியப் பொறுப்பில்லாததோ எப்படிப்பட்ட உடன்படிக்கை யானாலும் அதை பொருட்படுத்தாமலிருப்பதில் கொஞ்சமும் லஜ்ஜையில்லாத ஒரு வெற்றியடைந்தவன் கையில் 'விஷி' கவர்ன்மெண்டானது அகப்பட்டுக் கொண்டு தத்தளித்துக் கொண்டிருந்தது. மேலும், சுவற்றுப் பூனைகளாயிருந்த தேசத்தாரை பயமுறுத்தவும், தங்கள் பாது காப்புப் படைகளை நாலாபக்கமும் அனுப்பும்படி செய்து பிரிடனை சங்கடப்படுத்தவும், ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் "புது முறை" யின் பலத்தையும், அடக்கமுடியாத ஆதிக்கத்தை யும் வாயைத் திறக்காத ஸோவியட் உணரும்படி செய்யவும், ஜெர்மனியுடனும் இதாலியுடனும் ஜப்பான் யுத்த பங்குக்காரராகச் சேர்ந்த மூவர் உடன்படிக் கையை உலகத்திற்கு ஹிட்லர் பிரசுரப்படுத்தினன்.

## மூன்றுவது விபத்து.

அப்போது மூன்றுவது சம்பவம் தெய்வாதீனமாக நேர்ந்தது; அதை ஜெர் மானியர்கள் துரதிர்ஷ்டத்தின் பெருக்கு அல்லது யாரோ ஏமாந்தது என்று சபிக்கலானார்கள்; உண்மையில் கேவலம் பலத்தின் பேரில் தர்மம் பெற்ற வெற்றியென்று மதிக்கலாம். முஸோலினியானவன், நாஸிகள் தலைமைக்குள்ளகப் பட்டு, துறட்டிப்பழம்போல் லாபமடைவதைக் காட்டிலும், கைப்பழம் சம்பா தித்து வைத்துக்கொள்வது நலமென்றெண்ணி, கிரீஸின் பேரில் படையெடுக்க உத்தரவிட்டான். கிரீஸ் உலகத்தார் வியப்படையும்படியாகத் திருப்பியடித்தது, அதுவும் பலமாக. மூர்த்தியே செய்த ஏற்பாட்டின் பலனே, அல்லது சமயோ சிதமோ, நேசதேசத்தார் தலை நிமிர்ந்தது! மத்தியதரைக்கடற் படையின் கப்பல் இலாகாவும், விமான இலாகாவும் இதாலியர்களைப் பிடுங்க ஆரம்பித்தன; இதாலியர் கொண்டாடி வந்த கப்பற்படை எடிரியாடிக் (Adriatic) சமுத்திரத்தில் பதுங்கும்படி அடித்தும், லிபியாவில் கிரேஸியானிக்கு உபயோகமாகக்கூடிய விதமாகவும், நமது நீல நதிப்படைக்கு இடைஞ்சலாகும் விதமாகவும் ஒன்றும் நடவாமலிருக்கும்படி மத்திய சமுத்திரத்திலுள்ள கப்பல்களை விறட்டியடித்தன. திருப்திகரமான மற்ற சம்பவங்கள் ஏற்பட்டன. தளகர்த்தர் வேவல் (General Wavell) மூர்த்தி சிறியதானலும் கீர்த்தி பெரியதான ஒரு படையுடன் கேவலம் பாதுகாப்புஸ்தானங்களிலிருந்து ஆபிரிக்காவின் வடபாகத்திலிருந்து இதாலியரை விறட்டியடிக்க ஆரம்பித்தார். ஸோலம் (Sollum) விழுந்தது, ஸிடி பாரானி (Sidi Barrani) விழுந்தது, பார்டியா (Bardia) இப்போதுதான் விழுந்தது, பிரிட்டிஷ் துருப்புகள் டொப்ருக் (Tobruk)-கை அமட்டிக்கொண்டிருக்கின்றன. அதற்குச் சற்று முன்னல்தான், கடலுக்கு வடபாகத்தில், கிரேக்கர்கள் திருப்பி எதிர்த்து தங்கள் விரோதிகளைத் தங்கள் நாட்டிலிருந்து அல்பேனியா எல்லைப்பக்கம் பிடித்துத்தள்ளி, கோரிட்ஸா (Koritza), போக்ராடெட்ஸ் (Pogradetz), ஆர்கை ரோகாஸ்ட்ரோ (Argyrocastro), க்ளிஸ்ஸூரா (Klissura)வுக்கு அப்பால் விறட்டி, கடைசியாக எட்ரியாடிக் (Adriatic) சமுத்திரத்தில் தள்ளப்படும் வரை எல்பாஸான் (Elbasan) வலோனு (Valona)வில் பிடித்துத்தொங்கிக் கொண்டிருக்கிறர்கள்.

## மாறுதல்.

பட்டாள விஷயத்திலும், காரியாம்சையிலும் மட்டும்தான் விஷயங்கள் இப்படி மாறியிருக்கிற தென்றில்லை. இதாலியின் மீசையில் மண்ணொட்டவில்லை யென்று செய்ய ஹிட்லர் எப்பாடு பட்டாலும் பாஸிஸ்ட் இதாலியின் சாயம் வெளுத்துப் போய்விட்டது; அத்துடன் அசைக்க முடியாதென்று எண்ணப் பட்டிருந்த அச்சு தேசத்தாரின் சாயமும் வெளுத்தது. இதற்கு அத்தாக்ஷியாக இன்னமும் நடு நிலைமையாகவிருக்கும் தேசங்களின் மனோபாவத்தை கவனிப் போம். எகிப்தில் வெளிப்படையான மகிழ்ச்சியும், நம்பிக்கையும்; துருக்கியால் பிரசுரப்படுத்தப்பட்ட வியாபார உடன்படிக்கையும், அழுத்தமான நேசமும்; யூகோஸ்லாவியா, பல்கேரியா, ஸ்பெயின் தேசங்களிலிலும், விஷியிலும் கூட ஜெர்மன் தந்திரமந்திரங்களுக்கு நாளுக்கு நாள் அதிகரிக்கும் வெளிப்படையான எதிர்ப்பு; ருமேனியா, டென்மார்க், நார்வே போன்ற ஜெர்மன் ஆக்ரமண நாடு களில் பலமான கிளர்ச்சி; இவைகளெல்லாம் காணப்படுகின்றன. இவைகளெல் லாம் வலுக்காமலிருக்கலாம்; ஆயினும் இவைகளைக்கவனித்துக்கொண்டே யிருக்க வேண்டிய பொறுப்பு ஜெர்மனியுடையது; "துருப்பு சஞ்சாரங்கள்" அவசியம்; "இந்த எல்லை அந்த எல்லையில்" ஜெர்மன் துருப்புகள் சேகரிக்கப்படவேணும்; லஞ்சம் கொடுப்பது, தாஜா செய்வது அதிகரிக்கவேணும்; ஒரு தேசத்தாரை இன்னொரு தேசத்தாருடன் போட்டிபோடச்செய்யவேணும்; ஒருவாறு சேதிக்கப் பட்ட பிரான்ஸில் ஆங்கிலருக்குச் சார்பான அபிப்பிராயத்திற்கிணங்கி விஷி கவர்ன்மெண்டைச்சேர்ந்த கிழங்கட்டைகள் இழுத்த இழுவைக்கு வராமல் பெரும் இடைஞ்சலாய்ப் போகாமலிருக்க வேண்டியதை உத்தேசித்து பிரான்ஸுக்கு விரோதமாக இதாலி நாடுகள் அபேக்ஷிக்காமலிருக்கும்படி பாத்துக்கொள்ள வேண்டியது. அதாவது நிர்ப்பந்தவசாத் நமது சைனியங்கள் நாலாபக்கங்களிலும் அனுப்பப்பட்டதால் நாம் ஏதோ சங்கடமான நிலைமையிலிருந்தோமென்றில்லாமல் ஜெர்மானியர் நிலைமை அப்படியாகிவிட்டது; இன்னுமொரு ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயம், ஸ்வஸ்திகா கொடி பறக்க வேண்டிய நாடுகள் ஜாஸ்தியாக ஆக, நாம் நமது கப்பல்களைக்கொண்டு அவர்களுக்குச் சாமான் சர்ஜா வருவதைத் தடுப்பதால் அவர்களுக்கு உபத்திரவம் ஜாஸ்தி. 'மலை விழுங்கிகள்' என்று பிரான்ஸ் தேசத்தார் கடிந்து பெயரிடப்பட்ட ஜெர்மானிய துருப்புகள் தாங்கள் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளைக்கொள்ளையிட்டு முடிந்தமேல், அவர் களுக்கு எந்ததிக்கிலிருந்தும் ஒன்றுமே கிடைக்காது; நாமோ, உலகத்தில் எல்லா திசைகளிலுமிருந்து நாளுக்குநாள் அதிகரிக்கும் மனித, யந்திர, தளவாட சௌகரியங்களைக் கப்பல் கப்பலாக ஏற்றி, காபந்துடன் எந்நிலைமையிலும் ஜெர்மானியரைக் காட்டிலும் அதிகமான காபந்துடன் கொண்டுவந்து ஹிட்லர் கண்வைத்திருக்கும் ஐரோப்பாவை நெருக்குவோம்.

## ஒரு எச்சரிக்கை.

இப்போதிருக்கும் நிலைமையை ஜாஸ்தி குதூஹலத்துடன் சொல்லிவிட்டதாக நான் நினைக்கவில்லை. ஆனால் யுத்தம் முடிந்து விட்டதென்றுவது, அம்மாதிரி யான எந்த அவசியமான நிலைமையும் கிட்டிவிட்டதாக நினைக்கக்கூடாது.

நூற்றுக் கணக்கான புராதன கட்டடங்கள் உடைந்து சுண்ணும்பும் செங்கலுமாக மாறி, ஆயிரக்கணக்கான ஒரு பாவமுமறியாத ஸ்திரீகளும் குழந்தைகளும் திடீர் திடீரென மாய்ந்து, பசியாலும், வியாதியாலும் உயிரிழந்து, லக்ஷக்கணக்கான வீரர்கள் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் 1941-லோ அதன் பின்னே இந்தப் போரின் முடிவான சண்டையில் கலந்துகொண்டு உயிரிழக்கும் படியிருக்கும். ஹிட்லரோ, தோற்கப்பட்டு, ஆத்திரம் கொண்டவனாய், விரட்டுப் பட்டு, ஏமார்ந்துபோன ஜனங்களுக்குப் பயந்து, வாய் நிறையச்சொல்லி ஆர்ப் பாடமாக ஆரம்பித்து விஷயத்தில் பிரயோஜனமற்ற எல்லா மனிதரைப்போலவும், கண்ணைத் துடைக்க ஏதேனும் தடபுடலாகச் செய்ய ஆரம்பிப்பான்! நாலா பக்கங்களிலும் தன்னைச் சூழ்ந்து பாடுபடுத்தும் ஹிம்ஸைகளிலிருந்து, தான் ஜெர்மானியர் வசிக்க இடம் தேடுதலையும், இவன் உயிரையுமே முடிவிற்குக் கொண்டுவருமுன் விரைவில் விடுவித்துக்கொள்ளவேண்டிவரும். சமாதானப் பேச்சை நிராகரித்து இதாலிக்குச் சென்று பாஸிஸ்ட் தத்துவத்திற்கும் முஸோ லினிக்கும் அபயப்பிரதானம் கொடுக்கவேண்டி தென்மேற்கு பிரான்ஸிலுள்ள தன் துருப்புகளை உபயோகிப்பானென்று ஒரு தீர்க்கதரிசி அபிப்பிராயப்படுகிறார். இன்னுமொருவர், ஹங்கேரி, ருமேனியாவில் நடைபெறும் பட்டாளப்போக்கு வரத்துகளைப் பார்க்க, டார்டனல்ஸ், துருக்கி, ஸிரியா, பாலஸ்தீனம், எகிப்து பக்கம் தாக்க எத்தனிக்கிறான் என்பது நிச்சயமெனக் கருதுகிறார். இன்னுமொரு வர் சொல்லுகிறார், கால்வாய் துறைமுகங்களில் ஜெர்மன் துருப்புப் பலமாகச் சேகரிக்கப்பட்டிருப்பதையும், அயர்லாந்தை பயமுறுத்த குண்டுகளால் தாக் கப்படுவதையும், கிரீன்லாண்டிற்கு அமெரிக்கத் துருப்புகள் அனுப்பவேண்டி இருப்பதையும் கவனிக்க, பிரிடனின் படையெடுப்பு நிச்சயம் என்கிறார். என்ன விஸ்தாரம் பாருங்கள்! இவை இரண்டு மூன்று வேலைகள் ஒரே காலத்தில் செய்யப்படலாமென்பதையும் ஆலோசியுங்கள்; அவன் வசம் அபரிமிதமாகத் தயாரிக்கப்பட்டு இயந்திரபலம் பொருந்திய துருப்புகள் இருப்பதையும், இன்னும் அவன் வசம் 35,000 விமானங்கள் இருப்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பார்த்தால்—வீண்யோசனைகள் செய்யவேண்டாம்! ஒன்று மட்டும் நிச்சயம், இவைகளில் ஒன்றோ எல்லாமோ, நாம் நினைக்காத இன்னும் ஏதாவதொன்றையோ ஹிட்லர் செய்ய முயற்சிப்பான். ஏனென்றால், வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக் கையால் அல்ல, **நிர்ப்பந்தத்தால்** செய்யவேண்டிவரும்.

இம்மாதிரி சம்பவங்கள் ஏற்பட ஹேஷ்யங்களிருக்கும் பொழுது நாம் கவலையன்னியில் நிம்மதியாகவும் திருப்தியாகவும் இருக்கக்கூடாதென்று நான் எச்சரிக்கிறேன். யுத்தத்தின் கொடுமையால் அநேகமாய் பாதிக்கப்படாத இந்தியாவில் இம்மாதிரி திருப்தி அடைந்த மனப்பான்மை காணப்படுகிறது. இந்நிலைமையானது, ராஜீயப்போராட்டத்தில் இறங்கிய மந்தபுத்தியுள்ள, மதம் பிடித்தவர்களின் யுத்த எதிர்ப்புப் பிரசாரத்தைவிட மிகவும் அபாயகரமென்று நினைக்கிறேன். இம்மாதிரியான தப்பு நிலையை புதுக்கோட்டையாகிய நம் நாட்டிலும் காண்கிறோம். நாட்டுப்புறங்களிலிருப்பதைவிட தலை நகரில் இதை

அதிகமாகக் காண்கிறோம். உதாரணமாக, கல்வி கற்றவர்களுடைய மனப்பான்மையை கவனிப்போம். ஜன சமூகத்திற்கேயேற்பட்ட ஒரு மகத்தான விபத்திலிருந்து நாம் எப்படித் தப்பிப்பது என்ற விவரத்தைப்பற்றி அறிவிக்கக்கூடிய ஒரு பிரசங்கம் பக்கத்திலேயே நடக்கும் பொழுது அதைக் கவனியாது இவர்கள் தனிமையில் வீண்பேச்சுப்பேசிக்கொண்டும், சீட்டுவிளையாடிக்கொண்டுமிருப்பதும், ஸமஸ்தானத்தில் யுத்த நிதிக்காகச் செய்யும் முயற்சிகளில் கவனமில்லாமலிருப்பதும் தான். இவர்கள் நம்முடைய இந்திய ராணுவப்படையின் தைரியத்திற்கும், சௌர்யத்திற்கும், அவர்கள் நைல்நதி பிரதேசத்திலுள்ள சாம்ராஜ்ய சைனியங்களோடு கலந்துகொண்டு யுத்தத்தின் போக்கைத்திருப்பி இந்தியாவானது கொஞ்சகாலத்திற்கு நிர்ப்பயமாயிருக்கும்படி செய்திருக்கும் வேலைகளுக்கும் நன்றி பாராட்டி, பாமர ஜனங்களுக்கு ராஜ விஸ்வாசமும் நம்பிக்கையும் உண்டாகும்படி வற்புறுத்தாதுபோனால், அவர்களுக்கு நான் ஒரு சமாசாரம் அறிவிக்கிறேன். நிச்சயமாய் அச்சுநாடுகள் பக்கத்தில் அவர்கள் உதவிக்காக ஜப்பான் தேசத்தை யுத்தத்தில் புகும்படி ஹிட்லர் தூண்டிவிடுவானென்று எண்ணுகிறேன். தாய் (Thai) நாட்டு மக்களுடைய முரட்டுத்தனமும் பிடிவாதமும் தான் இதற்கு அறிகுறி. நம்முடைய கடற்கரையிலிருந்து ஸயாமானது ஒரு விமானம் பறந்து செல்லும் தூரத்தில் தானிருக்கிறது. நம் நகரத்தின் மேல் 80 அடி உயரத்தில் ஒரு குண்டு வீசும் விமானம் ஆரவாரம் செய்தால் மேலே சொல்லியவர்களின் சீட்டாட்டத்தின் போக்கு என்ன கதியாகும்?

இம்மாதிரி கவலைப்படாமல் நிம்மதியாகவும், அலக்ஷியமாகவும் இருக்கவே கூடாது. இந்த சமயம் நம்மாலியன்ற அளவு பிரயத்தனம் செய்யவேண்டும். சரித்திரத்தில் இது வரையிலில்லாத ஒரு மகத்தான விபத்து இப்பொழுது உண்டாகியிருக்கிறது. ஹிட்லருடைய அபாயத்தை நிவர்த்திக்க, நாம் எல்லோரும், அதாவது, பிரிடன், இந்தியா, பிரிடிஷ் சாம்ராஜ்யம், இச் சமஸ்தான மக்கள், நம்மால் முடிந்ததையெல்லாம் செய்யவேண்டியது. ஆறு மாதங்களுக்கு முன் எப்படி முழு மனதுடனும், ராஜபக்தியுடனும், நம்பிக்கையுடனும் நடந்து கொண்டோமோ, அதைப்போலவே நாம் செய்யவேண்டிய வேலைகளையும் இடப்பட்ட கட்டளைகளையும் செய்யவேண்டியது; ஆனால், முன்னே தர்மம் தலைகாக்கும் என்ற நம்பிக்கை மட்டும் தான் இருந்தது; இப்பொழுதோ, நம்மை உற்சாகப்படுத்த, நடப்புகளில் இருந்து பரிபூரணமான வெற்றி நமக்குக் கிடைப்பது நிச்சயமென்ற நம்பிக்கை அதிகரித்து வருவதால், நமது மேற்சொன்ன கடமைகளை நாம் சந்தோஷத்துடனும் தைரியத்துடனும் செய்வோம்.

———

# வார யுத்தச் செய்திகள்.

(9—1—41 லிருந்து 15—1—41 வரை).

## உலகப் பாதுகாப்பு.

யுகேயுகே உலகத்தில் விபத்துக்கள் தோன்றி அவைகளை நிவர்த்திக்கும் கடமை ஏற்படுகிறது. இங்கிலாந்து-அமெரிக்க அபிவிருத்தி சங்கத்து முன்னிலையில் ஜனவரி 9-ல் மிஸ்டர் சர்ச்சில் சொல்லிய மாதிரி அப்பேர்ப்பட்ட சமயம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த மகத்தான சமயத்தில் நாம் முயற்சிக்கவும், தியாகம் செய்யவும் பாக்கியம் பெற்றிருக்கிறோம்.

## அமெரிக்காவின் பொறுப்பு.

இந்த மகா யுத்தத்தில் அமெரிக்காவின் பொறுப்பு ஒருவாறானது. பிரதம மந்திரி எடுத்துக் காட்டியபடி, அமெரிக்கா கைவிட்டாலும் பிரிடன் யுத்தத்தை நிறுத்தாது. தன்னுடைய பலத்தையும், பாதுகாப்புகளையும்கொண்டு எவ்விதமாகவாவது வெற்றியை யடைந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும். ஆனால், அதிலிருந்து உலகத்தில் நீண்ட சமாதான மேற்படாது. உலக அபிவிருத்தியும் தடைபட்டு மேற்போக்கில்லாமல் நின்றுவிடும்.

## அமெரிக்காவின் மனோபாவம்.

அமெரிக்கா ஸ்தானிகராய் பிரான்ஸில் வேலை பார்த்த எம்-புல்லிட் ஜனவரி 7-ல் பேசியதே அமெரிக்கர்களுடைய தற்காலத்திய மனோபாவமாகும். அதாவது, அச்சுநாடுகளைத் தோற்கடிக்கவேண்டுமானல் அமெரிக்கர்களும் சண்டையில் சேரவேண்டியதுதான். ஆனால் அதைச்செய்ய இப்பொழுது மனமில்லாததால், ஏதோ மிஞ்சியதைக் கொடுப்போமென்றிராமல், பிரிடன் கேட்கும், வியாபாரக் கப்பல்கள், யுத்தக் கப்பல்கள், விமானங்கள், உணவு, யுத்த தளவாடங்கள் முதலிய எல்லாவற்றையும் வேண்டிய அளவு கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்தால் அமெரிக்காவிலிருந்து போகும் ஒவ்வொரு சரக்கும் அதன் க்ஷேமத்துக்கே உபயோகப்படும்.

## யுனைடட் ஸ்டேட்ஸ் வரவு, செலவு திட்டம் (பட்ஜெட்).

இந்த நேயப்பான்மையையொட்டி, ஜனவரி 8-ல் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் பட்ஜெட்டைத் தயாரித்து சமர்ப்பித்தார். அதன்படி, மூன்று வருஷங்களில் பாதுகாப்புக்காக 2,50,000 லக்ஷம் டாலருக்கு—அதாவது ரூ 7,500 கோடி பெறுமான, யுத்த தளவாடங்கள் தயாரிக்கப்படும். இவைகள் அமெரிக்கப் பாதுகாப்புக்கும், ஜனநாயக நாடுகளின் பாதுகாப்புக்கும் உபயோகப்படும்.

## ஸுப்ரீம்-டைரக்டரேட்.

அதோடு யுத்தத் தளவாடங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக இலாகாவொன்று நியமனமாயிருக்கிறது. அதற்கு சர்வாதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதன் அங்கத்தினர் மிஸ்டர் வில்லியம் நூட்ஸன் (மேல்-அதிகாரி), மிஸ்டர் சிட்னி ஹில்மன் (உப-மேல்-அதிகாரி), மிஸ்டர் ஹென்றி ஸ்டிம்ஸன் (யுத்த மந்திரி), கர்னல் பராங்க் நாக்ஸ் (கப்பற்படை மந்திரி).

## பிரிடனுக்கு-உதவி-மசோதா

(குத்தகைக்கு விடவும், கடனாய்க் கொடுக்கவும்) யுனைடெட் ஸ்டேட்ஸின் இரண்டு சட்ட சபைகளிலும் ஒரே காலத்தில், தலைவர்கள், பிரிடனுக்கு உதவி செய்வதற்காக மசோதாவொன்றை ஜனவரி 10-ல் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்படி அமெரிக்கப் பாதுகாப்புக்காகப் பாடுபடும் எந்த தேசத்துக்கும் வேண்டிய யுத்த தளவாடங்களை அமெரிக்கா உற்பத்தி செய்யவும், வாங்கவும், விற்கவும், குத்தகைக்குவிடவும், கடனாய்க் கொடுக்கவும், இதர சாமான்களுக்குப் பதிலாய் மாற்றிக்கொள்ளவும், இவைகள் சம்பந்தமாக வேண்டிய ரகஸிய சமாசாரங்களை வெளிப்படுத்தவும் பிரிஸிடெண்டுக்கு பூரா அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இதோடு ஜனவரி 13-ல் குடியரசுக்கட்சியைச்சேர்ந்த மிஸ்டர் ஜெ. ஸிம்ப்ஸன் குத்தகைக்குவிடவும், கடன் கொடுக்கவும் மற்றொரு மசோதா ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார். இதுவும் ஏற்கனவே கொண்டுவரப்பட்டிருக்கும் உத்தியோகத் தரப்பு மசோதாவையொத்ததுதான். ஆனால் இதன்படி தற்போதைக்கு, பிரிடனுக்குமட்டும் உதவி செய்யப்படும். பிரஸிடெண்டுக்குக் கொடுத்திருக்கும் சர்வாதிகாரம் இரண்டு வருஷத்திற்குத்தான் செல்லும். ஆகவே, அமெரிக்காவில் உள்ள இருதிறத்தினரும், அதாவது, ஜனநாயகக்கட்சியாரும், குடியரசுக்கட்சியாரும் ஏகோபித்திருப்பதால் பிரிடனுக்கு உதவிசெய்யும் மசோதா விரைவில் சட்டமாய்விடும்.

பிரஸிடெண்டு தேர்தலில் ரூஸ்வெல்டோடு போட்டி செய்த மிஸ்டர் வெண்டல் வில்கியும் இதற்குச் சம்மதம் கொடுத்துவிட்டார். இவர் விமானப் பிரயாணம் செய்து சமீபத்தில் இங்கிலாந்துக்கு வந்து இப்போதைய நிலைமையைக் கவனிப்பார்.

## மசோதாவின் பயன்

இந்த மசோதா ஏற்பட்டதிலிருந்து டோகியோவில் பயமுண்டாகியிருக்கிறது. யுத்தத்தில் சேருவதாயும், முக்கியமாக ஜப்பானோடு யுத்தம் செய்வதாகவும் அமெரிக்கா இந்த மசோதா மூலம் அறிவித்திருக்கிறதென்று நினைக்கிறார்கள். டெட்ராயிட் சுதந்திர பத்திரிகையில் நிகழ்த்திய பிரகாரம் அமெரிக்காவின் அபிப்பிராயம் என்னவென்றால் "பாச்சிகை உருட்டியாகிவிட்டது யுத்தத்தில் இறங்குகிறோம் என்று சொல்லாமலே நாம் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம்."

## சில்லரை விஷயங்கள்.

விமான நிலயங்களும், கப்பல் நிலயங்களும் குத்தகைக்குவிடும் விஷயத்தைப்பற்றி சட்ட காரியங்களை நடத்த அமெரிக்க கோஷ்டியொன்று பிரிடனுக்குப் புறப்பட்டுவிட்டது.

பிரிடனுக்கு அமெரிக்காவில் இருக்கும் பங்குத்தொகைகள் சிலவற்றை விற்கப் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

பிரிடனுக்கு விற்கப்பட்ட அமெரிக்க யுத்த விமானங்கள் இடைவிடாது பிரிடனுக்குப் பறந்து வந்துகொண்டிருக்கின்றன. வழியில் சேதமொன்றுமில்லை. வழியில் ஜெர்மன் விமானங்கள் தடுத்தாலும், அவைகளைவிட வேகமாய்ப் பறந்து வந்துவிடும்.

பொதுஜன அபிப்பிராயத்தைக் கணக்கிடுங்கால்—அப்சங்கக் கணக்குப்படி யுனைடட்ஸ்டேட்ஸ் தெற்குப் பாகங்களில் 100-க்கு 76-பேர்களும், மேற்குப் பாகங்களில் 100-க்கு 66-பேர்களும், நியூ இங்கிலாந்தில் 100-க்கு 63-பேர்களும், என்ன வந்தபோதிலும் பிரிடனுக்கு உதவிபுரியவேண்டுமென்ற நோக்கத்தோடிருக்கிறார்கள்.

பிரஸ்தாபித்தபடி யுனைடட்ஸ்டேட்ஸ் கிரீன்லாண்டுக்கு சைனியங்களையும் அனுப்பவில்லை, விமான, கப்பல் நிலயங்களையும் கோரவில்லை. ஆனால், அதற்கு வேண்டிய யுத்த தளவாடங்களைக் கொடுக்கும்.

## புது ஸ்தானிகர்.

யுனைடட்ஸ்டேட்ஸுக்குப் புதிதாய் பிரிடிஷ் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் ஹாலிபாக்ஸ், இங்கிலாந்திலிருந்து புறப்படுமட்டும் மந்திரி அந்தஸ்தோடிருப்பார். அமெரிக்காவில் வசிக்கும்போதும் அதிலிருந்து விலகிக்கொண்டதாகவிருக்காது. கோடைகாலத்தில், கலந்துபேச, அவர் திரும்பிவந்தால் அவர் யுத்த-மந்திரி-சபையில் எப்பொழுதும்போல அங்கத்தினராயிருப்பார். டைம்ஸ் பத்திரிகை சொல்லுகிறபடி இது ஒரு நல்ல ஏற்பாடாகும். அமெரிக்கர்களோடும், அவர்களுடைய பிரஸிடெண்டோடும் நெருங்கிப் புழங்குமொருவர் பிரிடிஷ்-மந்திரி-சபையிலிருப்பது ஒரு புது ஏற்பாடானாலும், வெகு முன்யோசனையோடு செய்த ஏற்பாடாகும்.

ஹாலிபாக்ஸ் பிரபுவுக்குப்பதிலாக லாயிட் பிரபு, பிரபுக்கள் சபையில் தலைமை வகிப்பார்.

## லிபியா.

கடைசியாகக் கிடைத்திருக்கும் கணக்குப்படி, லிபியா யுத்தத்தில் இதாலியருக்கேற்பட்ட நஷ்டம்—94,000 சிப்பாய்கள் (இவர்களில் 3,500 பேர்கள் உத்தியோகஸ்தர்கள்), 203 டாங்கிகள், 589 பீரங்கிகள் (300,000 தோட்டாக்களோடு), 600 மிஷின்-பீரங்கிகள், 700 சிறு-பீரங்கிகள், 1,10,00,000 சிறு-தோட்டாக்கள். இதோடு 500 விமானங்களும் நஷ்டமாயின.

இந்த வாரத்தில் எல்-ஆடமும் (விமான நிலயம்), பாம்பாவும் (கடல்—விமான நிலயம்) பிடிக்கப்பட்டன. பென்காஸி, டெர்ணு, மார்போ, எல்மிமி, எல்கஜலா, பெனிணு, பெர்கா—முதலியவிடங்களை விமானங்கள் படையெடுத்தன.

ஜராபூப்பிலிருக்கும் இதாலியச் சைனியம் வளைக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் சரணுகதி செய்தி விடும். இந்த இடம் எகிப்துக்கு 50 மைலுக்கப்பாலும், டோப்ருக்குக்கு 150 மைலுக்குத் தெற்கேயுமுள்ளது. இதை கிரேஸியாணி ஏற்கனவே பிடித்துக் கொண்டு, இங்கிருந்து ஸீவா வழியாக எகிப்தைப்படையெடுக்க நினைத்திருந்தார்.

லிபியாவிலுள்ள கப்பல் நிலயங்களுக்குள் முதன்மையான டோப்ருக்கும் பிடிபடப்போகிறது. மேற்குப் புறத்திலிருந்து அதற்கு ஒருவிதமான உதவியும் வர முடியாது. பீரங்கிகள், டாங்கிகள், ஆகாராதிகள் சகிதமாய் பிரிடிஷ், ஆஸ்திரேலியத் துருப்புகள் வளைத்து நெருங்கிவிட்டன. விமானக் குறைவால் குறி பார்க்க முடியாமல் இதாலிய பீரங்கிகள் சும்மாயிருக்கின்றன.

## கிழக்கு ஆபிரிக்கா.

ஏரிட்ரியாவிலுள்ள மஸாவா நிலயமும், கஸாலாவுக்கு வட கிழக்கிலுள்ள ஒரு ராணுவஸ்தலமும் பிடிபட்டன.

கீன்யா பார்சத்தில் புயூணு, தூர்பி, எல்வாக் என்ற ஸ்தலங்கள் பிடிபட்டன.

கீன்யாவுக்கும், அபிஸீனியாவுக்கும் மத்தியிலுள்ள பாலைவனத்தில் 200,000 இதாலிய துருப்புக்களை மறித்துக்கொண்டதால் இவர்கள் கிரேஸியாணிக்கு உதவி செய்யப்போகமுடியாமல் போயிற்றென்று ஜெனரல் ஸ்மட்ஸ் சமீபத்தில் சமாசாரத்தை வெளியிட்டார்.

## அபிஸீனியா.

1935-ம் வருஷம் முதல் கலகம் செய்யத் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அபிஸீனியர்களுக்கு இப்பொழுது சமயம் வாய்த்திருக்கிறது. இந்த யுத்தத்தில் முதல் முதலாக இப்பொழுது சேர்ந்துகொண்டு நீல-நைல் கரையில் உள்ள குப்பாவை, பிரிடிஷ் விமானங்களின் உதவியைக்கொண்டு பிடித்துவிட்டார்கள். அங்கிருப்பவர்கள் ஓடாமல் மறிக்கப்பட்டால் அதிலிருந்து கலகம் பரவும்.

அபிஸீனிய சக்கிரவர்த்தியாகிய ஹெயிலிஸிலேஸி இப்பொழுது கார்டூமில் தங்கியிருக்கிருர். அவருடைய பழைய சேனைத்தலைவர்கள் அங்கு அவரை நாடுகிருர்கள். இதாலியச் சைனியத்தில் சேர்ந்திருக்கும் அவருடைய பிரஜைகள் ஓடி வந்து கஜ்ஜத்தில் அவருடைய சைனியத்தில் சேர்ந்து கொள்ளுகிருர்கள் "நான், என்னுடைய தலைநகராகிய அடிஸ் அபாபாவில் இதாலியருடைய ஓநாய் கொடியை இறக்கிவிட்டு, ஜூடாவின் சிம்மச்சிலையைப் பளிங்கில் செய்துவைத்து விடுகிறேன். நான் சமீபத்திலிருப்பது என் பிரஜைகளுக்குத் தெரியும், பிரிடிஷ் கவர்ன்மெண்டின் உதவியால் கலகம் பரவிக்கொண்டிருக்கிறது. நானே தலைமை வகித்து வெற்றி பெறுவேன். என்னை அடுத்துக்கெடுத்த முஸோலினிக்கு விநாச காலம் வந்துவிட்டது" என்று சக்கிரவர்த்தி சமீபத்தில் ராய்டர் நிருபரிடம் உக்கிரத்தோடு செய்தி விடுத்தார்.

கிழக்கு ஆபிரிக்காவில், அதிலும், விசேஷமாக, அபிஸீனியாவில் குடியேறின இதாலியர்கள் போக வழியில்லாமல் முழிக்கிறார்கள். கலகத்திலிருந்து குடும்பத்தார்களைத் தப்புவிக்க இவர்கள் பிரெஞ்சு ஸொமாலிலாந்தில் அடைக்கலம் கேட்கிறார்கள். இதாலிய கவர்ன்மெண்டு சம்மதித்தால் இதாலிய ஸ்திரீகளையும் குழந்தைகளையும் பத்திரமாய் வெளியேற்ற பிரிடிஷ் கவர்ன்மெண்டும் கருணையோடு சம்மதம் கொடுத்திருக்கிறது. இதாலி சம்மதித்தால் தோல்வியை ஒப்புக்கொண்டதாகும்.

11-ம் தேதி ஜொஹானஸ் பர்கில் ஜெனரல் ஸ்மட்ஸ் 1941-ல் அபிஸீனியாவையும், ஸோமாலிலாந்தையும் விடுவிப்பதே தென்-ஆபிரிக்காவின் வேலையாகுமென்று சொன்னதற்கொத்து காரியங்களேற்கனவே நடைபெறுகின்றன.

## அல்பேனியா.

இந்தப் பிராந்தியத்தில் கிரேக்கர்களின் முன்னேற்றம் நிற்கவில்லை. வலோனுப்பாதையில் முக்கியஸ்தலமாகிய க்ளிஸுரா 10-ம் தேதி பிடிக்கப்பட்டது. இதாலியின் நிலைமை பரிதபிக்கக்கூடியதாயிருக்கிறது. சில தினங்களுக்குள் இரண்டு சேனாதிபதிகள் ராஜீநாமாச் செய்தார்கள், இரண்டு சேனாதிபதிகள் ஆகாயவிபத்திலிறந்தார்கள், பனிரெண்டு சேனாதிபதிகள் கைதுசெய்யப்பட்டார்கள். இப்பொழுது அல்பேனியாவில் தலைமை வகித்த ஜெனரல் ஸொட்டு சரீர அசௌக்கியமென்று விலகிக்கொண்டார். ராணுவத்தலைவரான ஜெனரல் காபெல்லரோ இவருக்குப்பதிலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த அபஜய யுத்தத்தில் தலைமை வகிக்க ஒருவருக்கும் மனமில்லை.

## இதாலி.

இதாலியிலும், ஜெர்மனியிலும் தோல்வியாலேற்பட்ட அவமானத்தை மறைக்க பிரும்மப்பிரயத்தினம் செய்யப்படுகிறது. லிபியாமுழுவதும் போனாலும் ராணுவபலம் குறையாதென்று ஜெர்மனி சொல்லுகிறது. ரூஸ்வெல்டின் கண்டனமெல்லாம் துச்சமென்றும், பார்டியாவில் இதாலியர்கள் தோற்றாலும் மனச்சோர்வடையாததால் வெற்றி பெற்றார்களென்றும் இதாலியானது பிதற்றுகிறது.

டி-என்-டி, என்ற சரக்குக்குறைவால் இதாலிக்கு வெடிமருந்து செய்யமுடியவில்லை.

இதாலியின் முட்டாள்தனத்தைக்காண்பிக்கக்கூடிய இரண்டு சம்பவங்கள் இந்த வாரத்தில் ஏற்பட்டன.

லலோனிகா ஆஸ்பத்திரியிலிருந்த இதாலிய நோயாளிகளின் மேல் இதாலிய விமானங்கள் குண்டுகளைப்போட்டன.

மூன்று டார்பிடோக்கப்பல்கள், இரண்டு நாசகாரிகள் சகிதமாக 200இதாலிய சிப்பாய்கள் ஸால் என்ற கிரேக்கத்தீவைத்தாக்கினார்கள். ஆனால் அங்கு இரண்டு பேர்கள்தான் வசித்தார்கள். இவர்கள் இதாலியர்களைக் கண்டதும் ஒரு குகையில் மறைந்துகொண்டு, பிறகு அவர்கள் கப்பலேறியதும் வெளி வந்துவிட்டார்கள்.

## பிரான்ஸ்.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டின் கோரிக்கைக் கிணங்கி, குழந்தைகளுக்கான உணவுப்பொருள்களும், உடுப்புகளுமடங்கிய கப்பலொன்றை ஜெர்மனியின் கைவசமில்லாத பிரெஞ்சு பாகத்துக்குப்போக பிரிடன் சம்மதித்திருக்கிறது. அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தின் துவாராக இந்தப் பரிசுகள் கொடுக்கப்படும். இந்தச் சாமான்கள் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்தால் இனியும் அனுப்பப்படும்.

## ருமேனியா.

அன்டொனிஸ்கு நடத்தும் கவர்ன்மெண்டை ஆதரிக்கும் ஸீமா தலைவருக்குக் கீழ்பட்ட மிதவாதிகளுக்கும், ஐரன்-கார்ட் கக்ஷியை உற்பத்திசெய்த காட்ரெனு போதனையை பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் அமிதவாதிகளுக்கும் சண்டைகள் ஏற்பட்டிருக்கின்றன. பல கொலைகள் நடந்துவிட்டன. கவர்ன்மெண்டு கக்ஷியின் உதவிக்காக ஜெர்மன் சைனியம் வந்திருக்கிறதாம். மின்னல் போரில் நிபுணரான பீல்ட்-மார்ஷல் லிஸ்ட் வந்திருக்கிறார்.

மூன்று தினங்களாக ருமேனியாவில் டெலிபோன் சமாசாரங்கள் நின்றுபோயின. இதற்குக் கலகம்தான் காரணமென்று சொல்லப்பட்டதுபோக, இப்பொழுது புசல், மழையாலேற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

## பல்கேரியா.

பல்கேரியாவுக்கு ஜெர்மனியானது போர் கடிதமெழுதிவிட்டதாக வந்த செய்தி ஊர்ஜிதப்படவில்லை. ஆனால் ரகஸியமாய் சூழ்ச்சிகள் செய்யப்பட்டு மறைக்கப்படுகின்றன என்று தெரிகிறது. பல்கேரியாவின் பிரதம மந்திரியாகிய எம்-பிலியாப் பேசுவதைப் பார்த்தால் பல்கேரியா குட்டிச்சுவரில் உட்கார்ந்திருக்கும் பூனையைப்போலிருக்கிறது. எந்தப்பக்கம் குதிக்குமோ தெரியவில்லை. பல்கேரியாவுக்கு ஜெர்மன் பைத்தியமும் கிடையாதாம், இங்கிலாந்துப் பயித்தியமுமில்லையாம், நாஸி அரசியலையும், ஸோவியத் அரசியலையும் வெறுக்குமாம். ஏற்கனவே நடந்த அக்கிரமங்களை நிவர்த்திக்க மேலும் ராஜ்யம் வேண்டுமாம். பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் பேச்சுகளிலிருந்து யுத்தம் பரவும்படியான ஸ்திதியில் இருக்கிறதாம்.

## ஜெர்மனியும், அது ஆக்கிரமித்திருக்கும் நாடுகளும்.

பிரிடிஷ் விமான எதிர்ப்பின் முடிவாக நிலக்கரி விளைவானது 100-க்கு 40 பங்கு குறைந்துவிட்டது. இதினாலும், ரெயில் வண்டிக் குறைவாலும் இதாலிக்கு ஏற்றுமதியாகும் நிலக்கரி குறைந்துவிட்டது.

ஜெர்மானியர் பிடித்துக் கொண்டிருக்கும் நார்வேயில் சட்ட விரோதமாக செய்யப்படும் நியமனங்களையெல்லாம் நார்வே கவர்ன்மெண்ட் அங்கீகரிக்க மாட்டாது.

ஹிட்லர் உத்தரவுப்படி தானியமும், கம்புங்கலந்து செய்யப்படும் ரொட்டியைச் சாப்பிடுவதால் ஹாலந்தில் கரப்பான் என்ற தொத்து வியாதி பரவுகிறது. மாவில் பதில்வெட்டு சாமான்களைக் கலக்கிறார்களாம். யூட்ரெக்ட் நகரம் ஒன்றிலேயே 20,000 ஜனங்களுக்கு தர்மத்துக்கு போஜனமளிக்கப்படுகிறதாம். ஹாலந்தில் கிடைக்கும் உணவுகளை ஜெர்மானியர் பிடுங்கிக்கொள்ளுகிறார்கள். ஆயிரக் கணக்கான டச்சுக்காரர்கள் வேலைசெய்ய ஜெர்மனிக்கு அனுப்பப் படுகிறார்கள்.

## ரஷ்ய—ஜெர்மானிய உடன் படிக்கைகள்.

மலையைக்கெல்லி எலியைப் பிடித்ததாய் விட்டது. மாலொடாவ் பெர்லினுக்கு வந்துபோனதும், ஒரு ரெயில்வே தொடர்வண்டி கொள்ளாத நிபுணர்களை கூட்டிவந்ததும் இதற்காகத்தான். ஆகஸ்ட் 1942 வரையில் வியாபாரத்தை சரிப்படுத்திக்கொண்டு, எண்ணெயும், தான்யமும் ஜெர்மனி வாங்கிக்கொண்டு ரஷ்யாவுக்கு யந்திர சாதனங்களை விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் புதிதொன்றுமில்லை. அமெரிக்கா பிரிடனுக்குதவிசெய்வது போல ரஷியா ஜெர்மனிக்குதவிசெய்வதாகச் சொல்லப்படுகிறது.

லிதுவேனியாவின் எல்லையைக்குறிப்பிட்டும், லிதுவேனியா, லாட்வியா, எஸ்தோனியாவில் வசிக்கும் ஜெர்மானியர்களை வெளிப்படுத்தவும் வேறிரண்டு ஒப்பந்தங்களும் முடிவுக்குவந்திருக்கின்றன.

## கிழக்கு தூரதேசம்

மீகாங் நதிக்கரையில் எல்லைப்புற அமைப்பை முன்னிட்டு தாய்-லாந்தானது பிரஞ்சு-இந்து-சைனாமேல் போர் துவக்கியிருக்கிறது. பிரெஞ்சு சைனாவின் மேற்குப்பாகமாகிய கம்போடியாவுக்குள் வெகுதூரம் பிரவேசித்திருக்கிறது. ஸிஸோபோன், பெயிலின், ஸீம்ரீம் இடங்களை விமானங்கள் எதிர்த்தன. ஆரண்ய-பிரதா பிராந்தியங்களை பிரெஞ்சுத் துருப்புகள் காலிசெய்துவிட்டன. 24-ஜில்லாக்களில் ராணுவ-சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. ஹானாயிலிருந்து தலைநகரம் ஸெயிகானுக்கு மாற்றப்படும்.

## இந்தியா

பஞ்சாப் பிரதம மந்திரியாகிய ஸர். ஸிக்கந்தர் ஹயத்கான் மேற்குப் பாலைவனத்துக்குப்போய்த் திரும்பிவந்து பேசிவரும் வார்த்தைகள் இந்தியர்கள் யாவருக்கும் பெருமையையும் சந்தோஷத்தையும் கொடுக்கும். இந்தியர்கள் ஸிதி-எல் பரானியைப் பிடித்தபோது காட்டிய வீரமானது எவருக்கும் குறைந்ததல்லவென்றும், இந்திய சிப்பாய்கள் சௌக்கியமாயும், சந்தோஷமாயுமிருப்பதாயும், அவர்களுக்குக் கியாதி வந்துவிட்டதாயும், எவரையும், எதையும் எதிர்க்கத் துணிவோடிருப்பதாயும், ஜயத்தை அடைந்த பிறகு தான்திரும்பிவர எண்ணம் கொண்டிருக்கிறார்களென்றும் சொன்னார்.

மோவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ராணுவப் பள்ளிக்கூடத்தில் 100 ஸ்தானங்கள் காலியாயிருக்கின்றன. தகுதியான மாணுக்கர்களகப்படவில்லை. மாணுக்கர்களைப் பொறுக்க நியமிக்கப்பட்டிருக்கும் போர்டார்களின் அபிப்பிராயத்தில், சரீர பலத்தோடு மட்டும்கூடிய சோம்பேறிகளும் முட்டாள்களும், நன்ருய்ப் படித்து ஆனால் சதைவைத்து உட்கார்ந்தபடியே வேலைபார்க்க நினைக்கும் சிறுவர்களும், இந்த 6-மாதத்திய கடுமையான போதனைக்கு லாயக்கல்லவென்றும், பள்ளிக்கூடம் விட்டு பெற்றவர்களின் தர்மத்தில் வசித்துவரும் சோம்பேறிகளை விட உடனே வேலைக்கமர்ந்தவர்கள் உயர்வென்றும், அவர்களுக்கு, பி. எ., எம். எ.,க்களைவிடப் பொதுஅறிவு அதிகமென்றும், இதர வகுப்பார்களோடு சமபோஜனம் செய்ய ஆக்ஷேபிப்பவர்களிதற்குக் கூடாதென்றும் தெரிகிறது.

## ஆகாயப்போர்.

குளிர் காற்ருல் ஜனவரி 7-ம் தேதி மட்டும் சும்மாயிருந்துவிட்டு, மற்ற நாட்களில் பிரிடிஷ் விமானங்கள் கடற் கரையிலும், ஜெர்மனிக்குள்ளும், இதாலிக்குள்ளும் சென்று போர் செய்தன. பார்க்கூம் தீவிலுள்ள ஜெர்மன் விமான நிலயம் தகர்க்கப்பட்டது. ஜெர்மன் விமான படைகளின் நேர் போரானது ஜனவரி 10-ல் துவக்கப்பட்டது. அன்று 100 சண்டை விமானங்கள் புடை சூழ பாம்பர் விமானங்கள் சென்று பிரெஞ்சு விமான நிலயங்களிலிருந்த ஜெர்மன் விமானங்களை 100 அடி உயரத்தில் நின்றுகொண்டு தகர்த்தன.

ஆல்ப்ஸ் மலையின் மேல் பீரங்கிகளை நிறுத்தி பிரிடிஷ் விமானங்களைத் தடுக்க இதாலி செய்த பிரயத்தனம் பயன்பட வில்லை. பிரிடிஷ் விமானங்கள் சேதமின்றி இதாலிக்குப் பறந்து சென்று டியூரினிலுள்ள வெடி மருந்துச் சாலைகளை எதிர்த்து இதாலியருக்கு சர்ச்சில் செய்த பிரஸங்கத்-துண்டுப் பத்திரிகைகளைப் போட்டு வந்தன,

7, 8, 9-ல் லண்டனில் விமானப் போர் கிடையாது. குளிர், மழை சற்று நின்றதால் வியாழக்கிழமை துவக்கிற்று. ஆனால் தீப் பிடித்த இடங்களெல்லாம் சரியான பந்தோபஸ்திருப்பதால் உடனே அணைக்கப்பட்டன. ஒரு வெடி விழுந்தவுடன் அதை அணைக்க 20 பேர்கள் முன் வருகிருர்கள்.

சமீபத்தில் நடந்த விமான எதிர்ப்புகளால் வெஸ்ட்மின்ஸ்டர் கோவிலும், வெஸ்ட்மின்ஸ்டர்—ஸிடி-ஹாலும், டெம்பிளும் சேதப்பட்டன.

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **6—1—41** (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்:—3 விரோதி சாமான் கப்பல்கள்.—நார்வே (Norway) கடற்கரைக் கப்பால். | ...... | 1 கப்பல் சேதமாயிற்று. |
| | எண்ணெய் ஏற்றிச்செல்லும் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | ஒரு கப்பலின்மேல் குண்டு வீழ்ந்தது. |
| | இரவில்.—விமான நடவடிக்கை இல்லை. | ...... | ...... |
| | இதாலிய ஆபிரிக்கா (**Africa**). | | |
| | விமான நிலயம்.—எல் ஆடம் (El Adam). | ...... | பிரிடிஷார் வசமாய் விட்டது. |
| | சமுத்திரக்கரையும், இன்னும் மற்ற ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள் (ஊருக்குள்).—டொப்ருக் (Tobruk). | நஷ்டமில்லை. | 2 விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன; பல நாசமாயின, பலத்த சேதம். |
| | டெர்னு (Derna); மார்டுபா (Martuba), துறைமுகம், ஒரு மின்சார உற்பத்திச் சாலை, கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | குறிதவராமல் குண்டுகள் போடப்பட்டன. தீயும், வெடிகளும், கிளம்பின, பல கப்பல்களில் தீப்பிடித்தது. |
| | அல்பேனியா (**Albania**). | | |
| | துறைமுகம், இதர இடங்கள்.—வலோனு (Valona). | 1 விமானம். | 2 விமானங்கள். |
| **7—1—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | காலநிலை சரியாக இல்லாததால் விமான நடவடிக்கையில்லை. | | |
| | இதாலிய ஆபிரிக்கா (**Africa**). | | |
| | துறைமுகம், தற்காப்பு ஸாதனங்கள்.—டொப்ருக் (Tobruk). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 7—1—41. | (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | ராணுவசாமான் கிடங்குகள், கட்டடங்கள்.—எல்பாஸான் (Elbasan). | ...... | பல கட்டடங்கள் இடிந்தன. பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | விமானச் சண்டை.—அல்பேனியா (Albania). | நஷ்டமில்லை. | 3 விமானங்கள். |
| 8—1—41. | (புதன்கிழமை). | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில்:—கப்பற்படை நிலயங்கள்.—வில்ஹெல்ம்ஷாவன் (WILHELMSHAVEN), எம்டன் (EMDEN). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | விமான நிலயம், சைன்யங்கள் வசிக்கும் இடம்.—போர்கூம் (BORKUM)-தீவு. | நஷ்டமில்லை. | எங்கும் ஒரே நாசம். |
| | **இதாலி (Italy).** | | |
| | யுத்தக்கப்பல்கள், வியாபாரக்கப்பல்கள், கப்பல் நிற்குமிடங்கள், ரயில்வே ஸ்டேஷன்.—நேபிள்ஸ் (NAPLES). | ...... | பல கப்பல்களுக்குச் சேதம், பல கட்டடங்களும், ரயில் பாதைகளும் நாசமாயின. |
| | பாலர்மோ (PALERMO) ... | நஷ்டமில்லை. | ..... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | குப்பா (GUBBA)—டாஞ (TSNA)-ஏரிக்கு மேற்கு, நீல நயில் (BLUE NILE)-நதியினுடைய கரையில்). | இதாலியரை விரட்டியடித்து விட்டு பிரிடிஷார் ஆக்கிரமித்துக் கொண்டனர். | ...... |
| | விமான நிலயங்கள்.—கஸாலா (GAZALA) | ...... | 2 விமானங்கள். |
| | மார்டுபா (MARTUBA), ... | ...... | 11 விமானங்கள் தீக்கிரையாகின; மற்றும் பல நாசமாயின. |
| | பெனினா (BENINA). ... | ...... | பல சேதமாயின. |
| | மிமி (TMIMI), ... | ...... | 7 விமானங்கள். |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **8—1—41.** | (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | சாமான் கிடங்குகள், கப்பல்கள்.—பென்காஸி (BENGHAZI). | ...... | 4, 5-கப்பல்களின் மேல் குண்டுகள் வீழ்ந்தன. |
| | தற்காப்பு ஸாதனங்கள், இன்னும் மற்ற முக்கியமான இடங்கள்.—டொப்ரூக் (TOBRUK). | ...... | பலத்த சேதம். |
| | இதாலிய துணைகாவல் கப்பல்கள்.— இயாராபப் (IARABUB)-என்னுமிடத்திற்கு வடமேற்கே. | நஷ்டமில்லை. | ...... |
| **9—1—41.** | (வியாழக்கிழமை). | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில் :—எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலை.—கெல்ஸன் கர்ச்சன் (GELSENKIRCHEN). | ...... | ஆலை முழுவதும் தீயால் மூடப்பட்டது. |
| | உள்நாட்டுத் துறைமுகங்கள்.—டூயிபர்க்-ரூரார்ட் (DUISBERG-RUHRORT), டஸ்ஸல்டார்ப் (DUSSELDORF). | ...... | ...... |
| | தொழிற்சாலைகள், உலைகள்.—ரூர் (Ruhr) | | |
| | எண்ணெய் சேமித்து வைத்திருக்கும் இடம்-ராட்டர்டாம் (Rotterdam). | ...... | தீப்பிடித்தது. |
| | கப்பல் நிற்குமிடங்கள்—ப்ரஸ்ட் (Brest), ப்ளஷிங் (Flushing), டன்கர்க் (Dunkirk), கலே (Calais). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | ஒரு ரயில் பாலம்-நார்வே (Norway)-யில் எகர்ஸண்டு (Egersund)-க்கருகே. | 2 விமானங்கள் | பலத்த சேதம். |
| | **இதாலி (Italy).** | | |
| | யுத்தக்கப்பல்கள், துறைமுகம், எண்ணெய் சேமித்து வைத்திருக்கும் இடம்—ஸிஸிலி (Sicily)-யில் மெஸ்ஸீனா. | நஷ்டமில்லை | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | இதாலியத்துருப்புகள்.—கிழக்கு ஆபிரிக்கா (Africa)-வில் ஒரு பட்டணம். | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 9—1—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி | | | |
| | விமான நிலயங்கள்—பெனினு (Benina), பெர்கா (Berka). | ...... | தரையில் இருக்கும் விமானங்கள் நாசமாயின. |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | முக்கியமான இடங்கள்—சண்டை நடக்கும் இடம். | | |
| 10—1—41 (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்—விமான நிலயங்கள்—ஜெர்மனி ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் வட பிரான்ஸ் (France). | ...... | தரையில் இருக்கும் பல விமானங்கள் சேதம். |
| | தரையில் இருக்தும் விமானங்கள்—கலே (Calais)-யிக்கருகிலுள்ள கைனிஸ் (Guines) காடு. | ...... | பெரிய தீ பரவிற்று. |
| | ரயில்வே ஸ்டேஷன்—கலே (Calais)-யிக்கருகே பீரங்கிகள், துருப்புகள்—விஸ்ஸாண்டு (Vissant)-க்கருகே. | | |
| | இரவில்:—கப்பற் துறைகள்.—ப்ரஸ்ட் (Brest). | ...... | பெரிய கப்பல் தாக்கப்பட்டது. பல இடங்களில் தீப் பிடித்தது. |
| | கப்பல்கள். லா ஹார் (Le Havre) துறைமுகம். | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | காப்ரோனி (Caproni) தொழிற்சாலை.—மாய் அடாகா (Mai Adaga). | ...... | தீப்பிடித்தது. |
| | கட்டடங்கள்.—அஸ்மாரா (Asmara). | ...... | ...... |
| | துருப்புகள்.—தாஷாய் (Tashai)-டெஸ்ஸேனி (Tesseni) பிரதேசம். | ...... | பலருக்குக்காயம். |
| | அபிஸீனியா (Abyssinia)வில் யாவெல்லோ (Yavello) | 2 விமானங்கள். பல சேதமாயின. | ...... |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **10—1—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | மோட்டார் வண்டிகள், காலாட்படைகள்.—டோபல் ((Dobel). | ...... | ...... |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | சைன்யங்கள், இயந்திர ஸாதனங்களுடன் கூடிய துணைகாவல்படை.—அல்பேனியா (Albania). | ...... | பலத்தசேதம். |
| **11—1—41** (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில் :—துருப்புகள்.—டோம்பர்க் (Domburg). | ...... | பலருக்குக்காயம். |
| | அணை.—ஸீப்ரக்கே (Zeebrugge.) | ...... | ...... |
| | சிறிய கப்பல்கள்.—ஹாலந்தி (Holland)ல் மிடில் ஹார்னெஸி (Middelharnis) லுள்ள கால்வாய். | ...... | பல சேதமாயின. |
| | இரவில் :—கப்பற் கட்டுமிடங்கள்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven). | 2 விமானங்கள். | ...... |
| | **இதாலி (Italy).** | | |
| | ராயல் ஆர்ஸீனல்(Arsenal), டூரின் (Turin). | ...... | பெரிய தீ கிளம்பிற்று. |
| | மற்றேரு இடம்.—டூரினு (Turin)க்குச் சமீபம். | நஷ்டமில்லை. | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | கப்பல்கள், துறைமுகம்.—பென்காஸி (Benghazi). | ...... | ...... |
| | கடல் விமான நிலயம்.—பொம்பா (Bomba). | ...... | ...... |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | வேவுபார்த்தல்.—விரோதியின் பின்னணி. | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| **12—1—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | பகலில்:—கடற்கரையில் குழி தோண்டிக் கொண்டு ஒளிந்திருக்கும் ஜெர்மன் சைனியங்கள், கப்பல்கள், தற்காப்பு சாதனங்கள்.—பிரெஞ்சு (French), பெல்ஜிய (Belgian)க் கடற்கரை. | ...... | பலருக்குக் காயம் ஈ (E) படகுகளும் மற்றும் சிறிய கப்பல்களும் தாக்குண்டன; பலத்த சேதம். |
| | 2 விரோதி சாமான் கப்பல்கள்.—நார்வே (Norway). | ...... | குண்டுகள் அவைகளின் மேல் வீழ்ந்தன. |
| | இரவில்:—எண்ணெய் சுத்தி செய்யும் இடங்கள்.—ரீஜன்ஸ்பர்க் (Regensburg), ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | தீயும், வெடிச் சத்தங்களும் கிளம்பின. |
| | கப்பல் நிறுத்துமிடங்கள்.—ப்ரெஸ்ட் (Brest). | ...... | பலத்த சேதம். |
| | சாமான் கிடங்கு.—வாஸெட் (Wasset). | ...... | தீப்பிடித்தது. |
| | ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் துறைமுகங்கள்.—லோரியான் (Lorient), லாஹர் (Lehavre), போர்ட் மிலிடேர் (Port-militaire). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | விமான நிலயங்கள்.—வான்னீஸ் (Vannes), சார்ட்ரீ (Chartres), எவ்ரு (Erreux), மோர்லே (Morlaix). | ...... நஷ்டமில்லை. | தீப்பிடித்தது. தரையில் இருந்த பல விமானங்கள் நாசமாயின. |
| | **இதாலி (Italy).** | | |
| | எண்ணெய் சுத்திசெய்யுமிடம்:—போர்டோ மார்கீரோ (Portomarghera)—வெனீஸு (Venice)க் கருகில், | 1 விமானம் | எங்கும் தீ கிளம்பிற்று. பல கட்டடங்கள் இடிந்தன. |

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **7—1—41** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain) | | |
| | பகலில்.—லண்டன் (London), கிழக்குக் கடற்கரையில் சிலபாகங்கள், மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... | சொற்பச்சேதம். சிலருக்குக்காயம். |
| | இரவில்.—விமான நடமாட்டம் இல்லை. | ...... | ...... |
| | அல்பேனியா (Albania). | | |
| | கோரிட்ஸா (Koritza). | ...... | 40 வீடுகள் இடிந்தன; 100 ஜனங்களுக்குக் காயம். |
| **8—1—41.** (புதன்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain) | | |
| | பகலில்.—ஸஸ்ஸெக்ஸ் (Sussex), கடற்கரையிலுள்ள ஆங்மெரிங் (Angmering), லண்டன் (London) பிரதேசத்தில் சில இடங்கள்.-மிட்லண்ட்ஸி (Midlands) ல் ஒரு பட்டணம்; கிழக்கு ஆங்கிலியாவில் (Anglia) ஒரு பட்டணம். | ...... | சொற்பச்சேதம்; சிலருக்குக்காயம். |
| | இரவில்.—காலநிலை சரியாயில்லாததால் விமானப்படையெடுப்பு இல்லை. | ...... | ...... |
| **9—1—41** (வியாழக்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain) | | |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம், லிவர்பூல் (Liverpool), இன்னும் சில மர்ஸிஸயிட் (Merseyside) பட்டணங்கள், மிட்லண்ட்ஸ் (Midlands), வடமேற்கு இங்கிலாந்து (England). | ...... 2 விமானங்கள் | சொற்பச்சேதம். சிலருக்குக்காயம். நெருப்புப் பிடித்ததை உடனே அணைத்து விட்டார்கள். |
| | அல்பேனியா (Albania). | | |
| | ஒரு ஆஸ்பத்திரி.—ஸலோனிகா (Salonika). | ...... | காயம்பட்டுக்கிடந்த இதாலிய சிப்பாய்களின் மேல் குண்டு வீழ்ந்தது. |
| | பிரிடிஷ் மத்தியதரைக்கடல் பிரதேசங்கள். | | |
| | விமான நிலயம்.—மால்டா (Malta). | 5 விமானங்கள். | சேதமேயில்லை. |

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **10—1—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | இரவில்.—ஜனங்கள் வசிக்கும் இடம்.— தெற்குக் கடற்கரைப் பட்டணம். | ...... | சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | போர்ட்ஸ்மத் (Portsmouth). | 2 விமானங்கள். | சேதமில்லை. |
| **11—1—41.** (சனிக்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | பகலில்.—கிழக்கு கெண்டி (Kent)-ல் ஒரு பட்டணம். | ...... | சிலருக்குக் காயம். சொற்ப சேதம். |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம், தெற்கு, தென்கிழக்கு இங்கிலாந்தி (England)-ல் சில இடங்கள் | ...... | சிலருக்குக் காயம். சிலர் இறந்தனர். சேதமேயில்லை. |
| | அல்பேனியா (Albania) | | |
| | முன்னேறும் கிரேக்க சைன்யம்—அல்பேனியா (Albania). | | |
| **12—1—41** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | பகலில்.—விமான நடவடிக்கையேயில்லை. | ...... | ...... |
| | இரவில்.—லண்டன் (London), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், லிவர்பூல் (Liverpool), ஒரு வடகிழக்குப் பட்டணம், மேற்கு இங்கிலாந்தி (England)-ல் ஒரு பட்டணம். | ...... | சிலர் இறந்தனர். தீப்பிடித்த இடங்களில் தீ உடனே அணைக்கப்பட்டு விட்டது. சொற்ப சேதந்தான். |
| **13—1—41.** (திங்கட்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | இரவில்.—ஒரு தென்மேற்குப் பட்டணம், மேற்கு கவுண்டி (County)-யில் ஒரு பட்டணம், லிவர்பூல் (Liverpool), வேல்ஸி (Wales)-ல் அங்குமிங்கும் சில இடங்கள். | ...... | பலத்த சேதம். சொற்ப சேதம். சிலருக்குக் காயம். |
| | கிரீஸ் (Greece) | | |
| | கார்ப்பூ (Corfu). | | |

# யுத்தக் குறிப்புகள்.

## காபராவும் உருட்டலும்.

ஜெர்மானியர் உடுப்பு உடுத்தித்தயாராயிருக்கிறார்கள், போகத்தான் இடமில்லை, எந்தக்காரியத்தை செய்வதென்று நிர்ணயிக்கிற நிலை அவர்களிடமில்லை, ஆயினும், மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஏதேனும் செய்யவேண்டியதாயிருக்கிறது, என்று சென்ற வாரம் சொன்னோம் அவர்கள் என்ன செய்யப் போகிறார்களென்று வெகுகருணையுடன் நேற்றிரவு ரேடியோ மூலம் சொன்னார்கள். அம்மாதிரி பிதற்றல்கள் கேட்டிருக்கமாட்டீர்கள். அமெரிக்கரின் உதவி வருமுன் பிரிடன் தோற்கப்படுமாம்—இல்லை, அழிக்கப்படுமாம், (அல்லவா?) ஜெர்மானிய 'படையெடுப்பு' என்பதுதான் அவர்களின் ஊளரலின் சாராம்சம்; அந்தபடையெடுப்பை எதிர்பார்த்து நடுக்கமெடுத்து படுக்கைகளில் செயலற்றுக் கிடப்போமாம்! இருக்கட்டும்... ...

(a) இந்தப்பேச்சு இதற்கு முந்தியும் கேட்டிருக்கிறோம்; ஜெர்மன் ரேடியோ கேட்கும் ஏமாளிகள் பலர் கேட்டிருக்கிறார்கள்; அது காரியத்தில் வெறும் பேச்சாய் முடிந்தது.

(b) ஹிட்லர் வேறு வழியில்லாமல் அது செய்யக்கூடிய ஒரு காரியமாதலாலும், அதைப்பற்றி இவ்வளவு தண்டோரா போடப்படுவதாலும், வேறு ஏதேனும். வேறு எங்கேயாகிலும், வேறுவிதமாக நடைபெருமென்று நாம் எதிர்பார்க்கலாம்.

(c) ஹிட்லரின் பைத்தியக்கார யோசனைகளில் இது ரொம்ப ஆஸ்தைப் பட்டதானதாக விருந்தால், பிரிடன் பாதுகாப்பு காரியங்களைப்பற்றி இந்த பத்திரிகையில் முன் ஒருதரம் எழுதியிருந்ததை ஹிட்லருக்குச் சமர்ப்பிக்கிறோம். கையாலாகாத பைத்தியக்காரனையில்லாத எவனையும் அது தயங்கச்செய்யும்; ஆனால் ஹிட்லர் படிப்பானென்றாவது, யோசிப்பானென்றாவது எதிர்பார்க்க முடியாது.

## முடிவிற்கு வருவதில் சிரமம்.

தளகர்த்தர் பிடேனை நினைத்துப் பரிதபிக்காமலிருக்க முடியாது. ஜனநாயக ஆட்சியில் அவருக்குப் பிடித்தமில்லாமலிருக்கலாம், ஆனால் அவர்போல் உண்மை தேசாபிமானமும், கண்யமும் பொருந்தியவருக்கு அவரது தற்கால நிலை வெகு சங்கடமானது. ஹிட்லரோ காலத்துடன்—அதாவது, சாவகாசக்குறைவுடன்—போராடுகிறான். பிரிடனை பயங்கரமான வகையில் தாக்க எண்ணுகிறான்; அப்படிச் செய்வதற்கு பிரான்ஸைக் கருவியாக உபயோகப்படுத்தப் பார்க்கிறான். லவால் ப்ளாண்டின், டார்லான், இவர்களைப்பற்றி பற்பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன; ஆனால் இந்த விருத்த தளகர்த்தரை எவ்வளவு நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதாலியை நேசதேசமென்று நினைப்பது குறைகிறது. உலகத்தையே அடக்கி நாஸிகள் வசமாக்குவதற்கு, முஸோலினிக்குப் பதிலாக, பிரெஞ்சு கப்பற்படை, மத்தியதரைக் கடலில் பிரெஞ்சு

நிலையங்கள், ஜெர்மனி ஆக்கிரமிக்காத பிரான்ஸின் வழியாக இதாலிக்கும், அதற்கப்பாலும் போக மார்க்கம் முதலியவைகளை ஜெர்மன் கையிருப்பாக மதிக்கப்பட்டு வருகின்றன. இந்த எண்ணத்துடன் தளகர்த்தர் பிடேன் தன் கண்யத்தை மறந்து, சமாதான ஷரத்துக்களையும் மறந்து, பிறரிடமில்லாத விதமாக தன்னிடம் நம்பிக்கை வைத்திருக்கிற பிரெஞ்சு ஜனங்களை காட்டிக்கொடுத்துவிட வேண்டுமென்று பிடேனை பல விதங்களிலும் பயமுறுத்தியும் தாஜா பண்ணியும் வருகிறார்கள்.

ஜெர்மானியர் வெற்றிபெறுவார்கள் எனபதை ஆதாரமாகவைத்து அரசியல் காரியங்கள் நடத்துகிறார்களா இல்லையாவென்று 'விஷி' கவர்ன்மெண்டாரை ஹிட்லர் விறட்டி விறட்டிக் கேட்கிறான்.

ரூஸ்வெல்டோ, சர்வாதிகாரிகள் இந்த யுத்தத்தில் வெற்றியடைய மாட்டார்களென்று சொல்லுவதுடன், ஜனநாயக ஆட்சியுள்ள தேசங்கள்தான் ஜயமடையுமென்று நிரூபித்துக்காட்ட தளகர்த்தர் லீஹியை விஷி கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கிறார்.

வெகு சீக்கிரத்தில், தளகர்த்தர் பிடேன் ஒரு முடிவிற்கு வரவேணும். பிரான்ஸுக்காக எக்காலத்திலுமில்லாத ஒரு பாரம் இவர் பேரில் இருக்கிறது.

## கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

### ஹிட்லர் கையிருப்பு.

(*a*) இருபது லட்சம் பிரெஞ்சு யுத்தக்கைதிகள் ஹிட்லர் வசமிருக்கிறார்கள்.

(*b*) ஸ்பெயினுக்கு ஒருவேளை கொடுக்க மொராக்கோ (Moracco) நீங்கலாக, இதாலியின் அயல்நாடுகளைப் பிரான்ஸுக்கு ஹிட்லர் கொடுக்கிறேன் என்று சொல்லலாம்.

(*c*) பிரான்ஸ், ஸ்பெயின், இதாலி ஒன்று சேர்ந்து ரோமன் கத்தோலிக்குகள் இஷ்டப்படி மதசுதந்திரமடையலாமென்று உறுதி சொல்லி பிடேனையும் மதப்பற்றுள்ள பிரெஞ்சு கத்தோலிக்குகள் மனதையும் கவரப்பார்க்கலாம்.

(*d*) பிரான்ஸ் பொருளாதாரநிலை பிறர் கையில் இருப்பதில், அப்படி இல்லாமல் சுதந்திரமிருக்கும்படி செய்வதாக ஹிட்லர் வாக்குறுதி சொல்லலாம் (ஹிட்லர் வாக்கில் எந்த அளவிற்கு உறுதியோ அந்த அளவிற்குச் சொல்லலாம்).

பிடேன் ஹிட்லர் சொல்லுவதை ஒத்துக்கொண்டுவிட்டாருனல், ஹிட்லர் மேற்கு மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கப்பற்படையை அடைத்து, கீழ் மத்திய பிரதேசத்தில் பிரிடிஷ் படைகளைத் தனிமைப்படுத்தி, பிரெஞ்சு, ஸ்பானிஷ் உதவியால் பிரிடிஷ் போக்கு வரத்து சாதனங்களை வெட்டிவிடலாம். அதன்பேரில் இரவு பகலாக பிரிடன்பேரில் விமான தாக்கல்செய்து, முடிவாக படையெடுப்பு!

### நேசதேசத்தார் கையிருப்பு.

(*a*) சமீபத்தில் பிரிடிஷ், கிரீக், வெற்றிகள பயனுக பிரான்ஸிலும், வெளியிலும் பிரெஞ்சுககாரருக்கு ஏற்பட்டிருக்கும் உற்சாகம்; கடைசியில் பிரிடிஷ் வெற்றி ஏறபடும என்ற காரியகாரணத்துடன் கூடிய நம்பிக்கை.

(b) நேசதேசத்தாருக்குத் தாராளமாக எல்லையில்லாமல் வேண்டியவரை யுத்த தளவாடங்கள் கொடுப்பதாக அமெரிக்கத் தலைவர் சமீபத்தில் செய்த அறிக்கைகளால் யுத்தத்தின் முடிவைப்பற்றி அதிகரித்த நம்பிக்கை.

(c) பிரிடிஷ் வெற்றிகளின் பயனாக இதாலியர் கையில் அகப்படாமல், 40 லட்சம் தயாரான துருப்புகளுடன் கீர்த்தியும், பிடேனைப்போலவே கண்யமும், பட்டாள அந்தஸ்துமுடைய ஒரு பெரிய தளகர்த்தர் வட ஆப்பிரிக்காவில் இருக்கிறார்.

(d) தளகர்த்தர் பிடேனின் உயர்ந்த குணத்தை, அவரிடம் அவர் தேசத்தாருக்கிருக்கும் அன்பும் மதிப்பையும் கவனிக்க அவர் அதிகாரத்திலிருந்து விலக்கப்பட்டால், பிரான்ஸில் எல்லாம் தலைவிரிகோலமாய்விடும். இன்னமும் பெரும் விபத்தில் இருந்து தப்பவேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் ஹிட்லருக்குக் கட்டுப்பட்டு தரைப்படை கப்பற்படைகளை பிரிடனுடன் போருக்குத் தயாரிப்பாரானால், முன்போல் ஒரு பெரிய அரசியல் புரட்சி கிளம்பிவிட ஹேதுவுண்டு.

இவ்வளவு சங்கடங்களுக்குட்பட்டு பிரெஞ்சுக் கப்பல்களையும் நிலையங்களையும் ஹிட்லர் கைவசப்படுத்த பார்க்கிறானென்றால் அவன் விரைவில் நெட்டையோ குட்டையோ ஏதேனும் செய்து தீரவேண்டிய இக்கட்டான நிலையிலிருக்கிறானென்பதற்கு ஒரு அடையாளம்.

## சமுத்திர ராஜத்துவம்.

கப்பற்படை சம்பந்தமாக செய்திகள் சொல்லுவதிலிருக்கும் கட்டுப்பாட்டை நாம் மீறுமலிருப்பதற்கு, கப்பற்படை க்ஷேமமாயிருக்கிறதென்று ஒவ்வொரு பிரிடிஷ்காரருக்கும் திடமான நம்பிக்கையே காரணமென்று சொன்னோம். இதாலியானது இந்தப்போரில் தலையிட்டுக்கொண்ட காலம் முதலே, பிரிடிஷ் கப்பற்படையானது மத்தியதரைக் கடலில் எங்கும் பரவி தன் வசமாக்கிக்கொள்ளாதிருந்தால் தளகர்த்தர் வேவலின் ஆச்சரியகரமான வேலையும், வெகு தைரியத்துடன் கிரேக்கர் இதாலியுடன் எதிர்த்துப் போராடியதும் நடைபெற்றிருக்காது. அச்சமயம் கப்பற்படையைப்பற்றிய தேழ்வைகள் எவ்வளவிருந்ததென்று கவனியுங்கள். பிரான்ஸ் தோல்வியடைந்ததால் ஐரோப்பிய கடற்கரை காபந்து நமது முதுகில் சுமர்ந்தது; சிங்கப்பூர் மலாய் நாட்டுப் பக்கம் கப்பற்படை ஜாஸ்தியாக்க வேண்டியதாகவிருந்தது. ஆயினும், ஆரம்பம் முதலே மத்தியதரைக் கடல் கப்பற்படை லகானைத் தன் கையில் வைத்துக்கொண்டிருந்தது; கப்பற்படைக்கு உதவி விமான இலாகாவுடன் சேர்ந்து இதாலிய கப்பற்படையின் காலை முறித்து ஒடிப்பதுங்கும்படி அடித்தது.

அது மட்டுமில்லை. ஜாஸ்தி வெளியில் பிரசுரப்படுத்தப்படாத டிஸம்பர் 17வ சம்பவமொன்று கேளுங்கள். ஒட்ராண்டோ ஜலசந்தி (Straits of Otranto) 45 மைல்தான் அகலம். அவைகளைக் காக்க, இரண்டு இதாலிய நிலையங்கள் இருக்கின்றன; அதாவது, மேற்குப்பக்கம் பிரிண்டிசி (Brindisi)யும் கிழண்டைப்பக்கம் சசேனோ (Saseno)வும். சில பிரிடிஷ் யுத்தக் கப்பல்களும், நாசகாரிகளும் இந்த ஜலசந்தி வழியாக சாவதானமாகச் சென்று, இதாலிய துறைமுகமான வலோனா (Valona) பேரில் யுத்தக் கப்பல்களின் பீரங்கிகளைத் திருப்பி குண்டுகள் போட்டுப்

பலமாகத்தாக்கி—கேளுங்கள் ஆச்சரியத்தை—சாவதானமாகத் திரும்பி வந்தன. எதிரிகள் வருகிறார்கள் என்று முன்னெச்சரிக்கையுள்ள இதாலியர்கள், பிரிடிஷ் கப்பற்படை திரும்பி செல்லுவதை எதிர்த்திருக்கக்கூடும்—அது மட்டுமா, எதிர்த்திருக்கவேண்டும். ஆனால் அப்படி செய்தார்களோ? இல்லை. "பிரிடிஷ் கப்பற்படையை அசைக்கமுடியாது!" இது அவர்களுக்குத்தெரியும். ஒன்று ஞாபகமூட்டிக்கொள்ளலாம், சென்ற மகா யுத்தத்தில் ஏட்ரியாடிக் சமுத்திரத்தில் பெரிய கப்பற் சண்டை ஒன்று கூட நடக்கவில்லை. அச்சமயம் இதாலியின் உதவியைக் கொண்டும், ஆஸ்திரிய கப்பற்படையை அச்சமுத்திரத்தை விட்டு வெளிக்கிளம்பாமல் அடைத்து வைத்திருந்தோம்; ஆயினும அந்த சமுத்திரத்திற்குள் நாம் நுழைவதோ, நுழைந்த பின் திரும்புவதோ சாவதானமில்லையென்ற எண்ணம் நமக்கு உண்டு

## மஞான.

இந்த வார்த்தைக்கு "நாளைக்கு" என்று பொருள். அதைத் தமிழரைப் பற்றிச் சொல்லுவதுபோல், கொஞ்சம் இடக்காக ஸ்பெயின் தேசத்தாரைப் பற்றி மொத்தமாக உபயோகிப்பதுண்டு. ஸ்பெயினுக்கு அன்வயிக்கும்போது, அந்தப் பதத்திற்கு என்ன அர்த்தம்? ஸ்பெயினில நடந்த கலகச் சண்டைக்குப் பிறகு 'நாளைக்கு' என்பதில் பண்டமில்லை; அதற்குப் பிறகும் பிரிடனும் அமெரிக்காவும் உதவி புரியவில்லையென்றால் பட்டினி கிடந்து சாகவேண்டியதும், பிரினீஸ்மலையைத் தாண்டி ஸ்பெயினுக்குள் ஹிட்லரின் பட்டாளங்கள் வருவதை எதிர்கொண்டழைக்காமல் போனால் ஜெர்மன் காலில் வைத்துத் தேய்த்து சவுக்கடி என்ற நினைப்புமாக இருக்கும்போது அவர்கள் நிலைமை இன்னமும் கஷ்ட நிலைமைதான்.

ஸ்பெயின் கவர்னமெண்டார் முக்கியமாக இந்நாளில் கவனிக்கவேண்டியது உணவு. இந்தப்போரில் மாட்டிக்கொள்ளக்கூடாதென்பது தளகர்த்தர்கள் நோக்கம்; பலாஞ்சிஸ்ட் (Falangists)கள் நீங்கலாக மற்றெல்லா ஜனங்களின் நோக்கமும் அதுதான். பிரினீஸ் மலைப்பக்கம் வெரும் உருட்டலோ இல்லையோ, ஜெர்மன் படையெடுப்பு வந்தால் ஸ்பெயின் தேசத்தார் எதிர்ப்பார்கள். ஆனால் யார் தான் பசி பொருப்பார்கள்? அரசியல் புத்திமான்கள் தேசத்தில் அமைதியும் ஒற்றுமையும் எதிர்பார்த்த காலத்தில், அதிருப்தியடைந்திருந்த பலரால் பல இடங்களில் பெருங்கலகங்கள் ஏற்பட்டன நல்ல வேளையாக, ஜெர்மனி, இதாலி, விஷி, முதலானவர்கள் தேவைக்குப் பண்டங்கள் வாங்கிவிடுவதாலும், ஸ்பெயின் அதிகாரிகளில் யோக்கியப்பொருப்பின்மையும், சாமர்த்திய மின்மையும் காரணமென்று பொதுவில் எண்ணப்படுகிறது; இத்துடன், மலாகா (Malaga), டாலிடோ (Toledo), ஸயரா நிவாடா (Sierra Nevada), ஆஸ்தூரியாஸ் (Asturias) இவைகள் பக்கம் துப்பாக்கிகள் வைத்துக்கொண்டு முறட்டாத்மாக்கள் திரிந்து வருவதில் "நாளைக்கு, நாளைக்கு" என்பதில் விஷயமில்லை. படாஜாஸிலும், கார்டோவாவிலும் (Badajos, Cordovo) கைதிகள் கலகம் செய்தார்கள், ஊர்க்காவல் அவர்களைச் சேர்ந்துகொண்டது. வைகோ (Vigo)வில் "சோறில்லை" என்று கூச்சல் போடுகிறார்கள். அந்தப் ப்ரதேச நாட்டை மறுபடியும் நிலைநாட்ட

வேணுமானல், கேவலம் "நாளைக்கு, நாளைக்கு" என்ற பதத்தில் தொக்கியிருக்கிற தலைவிதிப்படி நடக்கட்டும் என்ற மனோபாவத்தை விட்டு, காரியத்தைச் சாதிக்கும் வல்லமையுடையவர்களுடைய உதவியை தளகர்த்தர் பிராங்கோ (General Franco) தேடவேணும் பிரிடன், அமெரிக்கா மனமுவந்து செய்யத் தயாராக விருக்கிற உதவியை பெற்றுக்கொள்ளுகிறதாக பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டு சுவற்றுக் கோழித்தனத்தை விட்டு நமது கட்சியில்வந்து சேர்ந்தாலென்ன?

## 1940-ம் வருஷத்திய கடைசி வார ஓத்திகை.
## இரண்டு புதிர்களும், ஒரு பெரும் நிகழ்ச்சியும்.
## இதாலியின் தோல்வியைப்பற்றி ஹிட்லரின் மனநிலை.
## லவாலைத் தள்ளியதின் தாத்பர்யம்.

[ஆசிரியர் விக்ஹாம் ஸ்டீட்.]

யுத்தப்போக்கில் இரண்டு புதிர்களும், ஒரு பெரும் நிகழ்ச்சியும் தலைதூக்கி ஆக்கிரமித்து நிற்கின்றன. பெரும் நிகழ்ச்சி என்றது, மேற்கு எகிப்திலும், லிபியாவிலும் நேசதேசத்தாரின் பேரோங்கும், ஒருக்கால் இறுதியான, வெற்றி. புதிரில் முதலாவது இது—பெர்லின்—ரோம் அச்சில் தன்னுடைய இதாலியக் கூட்டாளியின் தௌர்பாக்கியம்—என், படுதோல்விகளைக் குறித்து—ஹிட்லருடைய கொள்கை என்ன? இரண்டாவது புதிர் இது—மார்ஷல் பிடேன் விச்சி கவர்ன்மெண்டிலிருந்து லவாலை வெளியேற்றி, பிளாண்டினை அந்நிய நாட்டு இலாகா மந்திரியாகக் கொண்டது.

இவைகள் மூன்றும் ஒன்றோடொன்று சம்பந்தம் இல்லாதனவல்ல. இதாலியை மண்ணைக் கவ்வும்படி கிரீஸ் செய்ததை ஹிட்லர் அசட்டைசெய்யலாம், அல்லது செய்வதுபோல் பாசாங்கு செய்யலாம். முஸோலினி கிரேக்கர்களை அடக்கமுடியாததில் ஹிட்லருக்கு உள்ளூர ஒரு திருப்தி இருக்கலாம். கிரேக்கத் தீவுகள் துறைமுகங்கள் இவைகளை முஸோலினி பிடித்திருப்பானாகில், அச்சில் அவன் கை ஓங்கியிருக்கும். அப்பொழுது அவன் பிரான்ஸில் ஏராளமான பங்கு கேட்டிருப்பான். அதை மறுக்க ஹிட்லருக்கு சிரமமாயிருக்கும். அதனல் ஹிட்லர் ஐரோப்பாவில் ஏற்படுத்தும் 'புதியத் திட்டத்துக்கு' பிரான்ஸ் ஒத்தாசை செய்யாது. கிரீஸ்போன்ற சிறு தேசத்தைக்கூட முஸோலினி ஜயிக்கமுடியவில்லை என்றால், பெரும் நாடாகிய பிரான்ஸ் மீது அவன் எந்த வாயைக் கொண்டு பாத்தியம் கொண்டாடுவது?

ஆனதால், முஸோலினி ஜயித்து தன்னை வற்புறுத்தாமல் இருக்கும் அளவு ஹிட்லருக்கு, அவன் கூட்டாளியாகத் தோன்றுவதில் வருத்தம் இல்லை. ஆனல் எகிப்தின்மீது படையெடுத்து அதைப்பிடிப்பது அச்சுத் திட்டத்தில் இதாலிக்கு அளிக்கப்பட்டிருந்தப் பெரும் பொறுப்பு. அதில் அது முறியடைந்தால், வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? பிரிடிஷ் வெற்றியால் வட ஆபிரிக்கா, சமீபக் கிழக்கு, மத்தியக்

கிழக்கு இங்கெல்லாம் அதன் செல்வாக்கு ஓங்கி நிற்கிறது. இதைவிட, இதாலி ஒருக்கால் யுத்தத்தைவிட்டே அகற்றப் படுமோ என்ற ஒரு அபாயத்தைக் கருத வேண்டிவருகிறது. அப்படி இதாலி அகன்ருல் பிரிடன் மத்தியதரைக் கடலில் எதிரியின்றி ஆதிக்கம் வகிக்கும்; அங்கிருக்கும் தன் பலத்த கடற் படையை, ஹிட்லர் பிரிடனைச் சுற்றிநீர் மூழ்கிகளால் செய்துவரும் முற்றுகையைத் தகர்க்க உபயோகிக்கும்.

நான் மதிப்பது சரியாகில், ஹிட்லர் இப்பொழுது ஒரு தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிருன். இதாலி பணியாமலிருக்க அவன் விரும்பிஞல், அதை நிலைநிறுத்த அங்கு ஏராளமான துருப்புகளை அனுப்ப வேண்டும். இதாலிக்கு ஏராளமான ஜெர்மன் படைகளை அனுப்புவது அதனை ராணுவத்தால் ஆக்கிரமிப்பதை ஒக்கும். அதனுல் இதாலியர்கள் தங்களுக்கு மானபங்கம் ஏற்பட்டதாக எண்ணக்கூடும். அவ்வாறு படையனுப்பாவிட்டாலோ 'பிரிடனும் பிரான்ஸும் சென்ற யுத்தத்தில் இதாலி இவ்வாறே சிரமப்பட்டபொழுது துருப்புகள் அனுப்பின. இப்பொழுது ஜெர்மனியைப் பார்' என்று அபவாதத்துக்கு ஆளாகவேண்டும். முன்யுத்த சம்பவம் இது: இதாலியர்கள் கபோரெட்டோவில் ஆஸ்திரியர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள். 3 பிரிடிஷ் அணிவகுப்புகளும், 3 பிரஞ்சு வகுப்புகளும் இதாலிக்கு உடனே சென்றன. அங்கு இதாலி தன் கௌரவம் குறைந்ததாக எண்ணுதபடி அவ்வளவு நாசூக்காக நடந்துகொண்டன. ஜெர்மன் வகுப்புகள் இதாலிக்குச் சென்ருல், இதைப் போல நாசூக்காக நடந்துகொள்ள முடியுமா என்று சொல்ல இயலாது.

ஜெர்மன் உத்தியோக அறிக்கைகள், இதாலிக்கு ஒத்தாசை செய்யச் சிறந்த வழி, பிரிடிஷ் தீவுகளில் பிரிடிஷ் மூல பலம் ஒடுங்கும்படி உக்கிரகமாகத் தாக்கி அதை அழிப்பதுதான், என்று வெளியிடுகின்றன. யுத்தத்தோரணைப் படி, ஏட்டில் இதில் ஒச்சமில்லை. அனுபவரீதியாக, அதில் இரண்டு ஒச்சம் உண்டு: (1) ஜெர்மனி பிரிடனை அழிக்கும் முன் இதாலி முறிந்துவிடலாம். (2) பிரிடனைப் பிடிக்கும் யுத்தத்தில், ஹிட்லர் இதுவரை வீணனதுபோல் இனியும் வீணுகலாம். இவற்றில் எது நேரிடினும், இதாலியின் உதவியை இழந்ததால் ஹிட்லரின் நிலைமை சீராகாது.

லவாலைப் போகச்சொன்னதற்கும், பிளாண்டினை நியமித்ததற்கும் எது உண்மைக் காரணமாக இருந்தாலும் சரி, நமக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து ஜெர்மானியர்கள் இதாலியைக் கைகழுவிவிட்டு, அதற்குப் பதிலாக பிரான்ஸை ஹிட்லருக்கு முக்கிய சகாவாக்கிக்கொள்ள உத்தேசிக்கிருர்கள், என்று தெரியவருகிறது. லவால் நல்ல பிரிடிஷ் விரோதி. அவனுக்குச் சொந்த விஷயங்களிலோ, அரசியல் விஷயங்களிலோ மனச்சாட்சியின் தொந்தரவு இல்லை. பிரான்ஸில் தான் வலுவுடைய இடமிருந்தால், ஹிட்லர் கட்டளைப்படி அவன் பிரான்ஸை பிரிடனுடன் போர்புரிய ஏவுவதிலிருந்து பின்வாங்கமாட்டான். அவன் பெடேனைத் தூக்கி எறிந்துவிட்டு, ஹிட்லரின் நிபந்தனைகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டிருப்பான். கௌரவம் பொருந்தியவன், ஆனுல், தவறுதல்கள் இழைப்பவன், என்று பிரிடிஷார் கரு

தும் பெடேன், தனக்குப் பதிலியாக லவாலே எவ்வாறு ஒப்புக்கொண்டான் என்பது ஒருவருக்கும் புரியவில்லை. அவனை பெடேன் வேலை நீக்கியிருப்பது, முடிவில் லவால் இன்னமாதிரி ஆள் என்பதைக் கண்டுபிடித்ததாகத் தெரிகிறது.

லவாலேப்போலவே பிளாண்டினும் ஜெர்மன் நேசன். ஆனல் லவாலேப் போல அவன் பிரிடிஷ் நெடும் துவேஷி யல்ல. அவன் சமயோசிதக்காரன். மூன்று நான்கு வருஷங்களுக்குமுன் அவன் பிரிடிஷ் நேசனுக இருந்தான். ஜெர்மனிதான் ஐரோப்பாவைக் கட்டி ஆளப்போகிறது என்று தோன்றிய பொழுது அவன் ஜெர்மன் நேசனுக மாறினன். இப்பொழுது அவன் இதாலி, கிரீஸில் உதைபடுவதையும், வட ஆபிரிக்காவில் உதைபடுவதையும் கண்ணுரப் பார்க்கிருன். புத்திசாலியானதால், இதாலி தோற்குல் ஜெர்மனிக்கு வலுவு என்று எண்ணமாட்டான். ஜெர்மனியுடன் பிரான்ஸ் ஒத்துழைப்பதாயிருந்தால், கிராக்கி செய்து கொண்டு ஜஸ்தி நலன்களைப்பெற இதுதான் ஏற்ற தருணம் என்று அவன் நினைக்க இடமுண்டு. ஜெர்மனி பிரிடனைத் தோற்கடிக்கமுடியாது என்பதையும் அவன் கணக்குப்பண்ணலாம். அப்படியானல் பிரிடிஷாரை மீளா விரோதிகளாக்கிக்கொள்ள அவன் விரும்பமாட்டான். அவனுக்கு நல்ல மூளை; உயர்ந்த குணம் கிடையாது. எதுக்கும் அஞ்சாத லவாலேப்போல, பிளாண்டினுடன் உறவு, ஹிட்லருக்கு அவ்வளவு திருப்திகரமாக இருக்கப் போவதில்லை.

எகிப்திலும், லிபியாவிலும் பிரிடிஷ் ஜயத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்காமல் மேலே நாம் கூறிய இரண்டு புதிர்களுக்கும் பதில்வரும் சில நாட்களிலேயே கிடைக்கும். பதில்கள் எவ்வாராயினும் சரி, பிரிடிஷ் ஜயம் என்ற பெரும் நிகழ்ச்சி யுத்தத்தின் போக்கையே ஒரு பெரும் திருப்புத்திருப்பப் போகிறது என்றே எண்ணுகிறேன்

---

# பிரிடனின் பலமான தற்காப்புகள்.

## பிரிடனில் எப்பொழுதுமில்லாத மிகப்பெரியதானவும், ஆயுதங்கள் பூர்ணமாயுமுள்ள பலமான சைனியம் இப்பொழுது இருக்கிறது.

---

**நா**ன்கு நூற்றுண்டுகளில் ஐந்து ஐரோப்பிய யதேச்சாதிகாரிகள் தங்கள ஆதிக்கத்தை ஐரோப்பாவில் நிலைநாட்டி அதைப் பூர்த்திசெய்ய இங்கிலாந்தை நசுக்கியாக வேண்டுமென்று நினைத்த காலத்தில், மனிதரின் ஸ்வாதந்திரத்தைக் காக்க பிரிடன் ஆயுதம் கொண்டது.

அந்த யதேச்சாதிகாரிகள் இஸ்பானிய பிலிப்பு, பிரெஞ்சு தேசத்து 14-வது லூயி, நெபோலியன், கெயிஸர், கடைசியாக ஹிட்லர் ஆக ஐவர்கள். முதல் நாலவர்களில் இஸ்பானிய பிலிப்புதான் பெரிய கப்பல்வ்யூஹம். (Great Armada) என்ற கப்பற்படையை பிரிடனுக்கு அனுப்பினன். மற்றவர்கள் வெரும் வீச்சுவீசி

பயமுறுத்தினார்கள். ஆனால் இங்கிலாந்தின் பேரில் படையெடுக்கவில்லை. இன்று நடக்கும் யுத்தத்தின் பிரச்னை யென்னவென்றால், ஹிட்லரைக்காட்டிலும் பெரியோர்கள் பிரயத்தினம் செய்து பலிக்காதுபோன காரியத்தை ஹிட்லர் செய்ய முயலுவானா என்பதுதான்.

இந்த வியாஸம் எழுதும் சமயத்தில், அந்தப் பிரச்னை இன்னும் தீராது நிற்கிறது. ஆனால் இப்பெரிய சூதாட்டத்தை ஆட நாஸிகள் முயலுவது ஸம்பா விதம் என்று நம் தலைவர்கள் எச்சரிக்கிறார்கள்.

## எச்சரிப்புக்குக் காரணம்.

இதுவரையிலும் கண்டிராத அவ்வளவு பெரிய மின்னற்படையெடுப்பு ஒன்றை ஹிட்லர் முயற்சிப்பான் என்பதற்கு ஸாதகமாகவும் பாதகமாகவும் விவஹரிக்கலாம். ஆனால் அந்த விவஹாரங்களினெல்லாம் கார்யத்துக்கு உதவாதது.

படையெடுப்பு அபாயம் நீங்கிவிட்டதென்று பிரிடிஷார்கள் நினைக்கும்படி செய்வதில் நாஸிகளுக்கு கவலையே ஒழிய சந்திரனும் கடல் பிரவாஹமும் எப்படியிருக்கிறதென்பதில் அவர்களுக்குக் கவலையில்லை.

இனி நாஸிகள் படையெடுக்கமாட்டார்கள் என்ற எண்ணம் முற்றும்படி செய்துவிட்டால் அதனால் பிரிடனில் ஏற்படும் தயாரிப்புக்குக்குறைவானது இங்கிலீஷ் கால்வாய் பிரவாஹங்கள், ஏறமுடியாத கடற்கரைகள் இவைகளைக் காட்டிலும் நன்மைபயக்கக் கூடியதென்று நாஸிகள் நினைக்கிறார்கள். ஆகையால் தான் சமீபத்தில் இங்கிலாந்தில் எச்சரிக்கைகள் கொடுத்தார்கள்.

உண்மையில் சந்தர்ப்பங்கள் இப்பொழுது இருப்பதைக் கவனித்தால் கடல் தாண்டிக்கப்பலேற முயற்சிக்கும் எந்த நாஸி படையையும் சந்திக்க இங்கிலாந் தானது வெகு பரிஷ்காரமாகத் தயாராக இருக்கிறது. இத்தற்காப்பு ஏற்பாடு நான்கு கிளைகள் உள்ளது. இதுவரையில் உலகம் கண்டிராதபடி அவ்வளவு பரிஷ்காரமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளாவன:--சைனியம், கடற் படை, விமானப்படை, உள்நாட்டுத் தற்காப்பு. படையெடுப்பதை எதிர்க்க முதலணியாக நிற்பவை கடற்படையும், விமானப்படையும். ஏனெனில், அவைகள் வேலை செய்யும் பிரதேசங்கள், அதாவது கடலும் ஆகாயமும், நாஸிகளின் படையெடுப்புப் பிரயத்தனத்தைப் பலிதமாகாமல் செய்யக்கூடியவை.

## துறைமுகங்களை நொருக்குவது.

இங்கிலீஷ் கால்வாயின் அக்கரைத் துரைமுகங்களில் எவ்வாறு நம் விமானப் படை வெகு உக்ரமாகப் படையெடுத்தனவென்பது நமக்குத் தெரிந்தவிஷயம். ஏனெனில், அவைகளிலிருந்து தான் வெகுசுலபமாக படையெடுப்பைத் துவக் கலாம். சாதாரணமான மனிதர்கள் அப்படி நொருக்குவதை ஒரு பெரிய விஷயமாக நினைக்காமல் இருக்கலாம். ஆயினும் அது ஒரு முக்கியமான விஷயம். ஏனெனில் இக்காலத்திய யந்திரம் நிறைந்த சைனியமானது ஒரு நல்ல துறைமுகமும் அதன் உபகரணங்களும் இருந்தால் தான் ஜயமடையமுடியும். கேவலம் இக்கரை அடைந்தால் மட்டும் போதாது.

ரோமர்களின் கப்பல்களில் ஏறி, அலைகள்மேல் பிரயாணம் செய்து பிரெஞ்சு தேசத்து வடகரைகளிலிருந்து படையெடுத்த ஜூலியஸ்ஸீஸர் நாளில் யுத்த தந்திரத்திலிருந்து வெகு தூரம் கடந்து வந்துவிட்டோம். அந்நாளில் ஒவ்வொரு போர்வீரனும் அவனுக்குரிய ஆயுதங்களை அவனே சுமந்து சென்றான். இந்நாளிலோ, லாரிகள், பீரங்கி மோட்டார்கள், போன்ற யந்திரங்களை கடல்மேல் ஏற்றுவதற்கான ஏற்றுமேடைகளும், தூக்குக்கருவிகளும், அவசியமாக இருக்கின்றன.

ஷெர்பரோ, லே ஹாவர், கெலெ, நார்வே, முதலிய இடங்களை இடைவிடாது தாக்கும் விமானப்படை நாஸியின் படகு கூட்டங்களையும், குண்டு நிதிகளையும், ஆயுத சேகரங்களையும், ஏற்று மேடைகளையும், துறைமுக வசதிகளையும் தாக்கிப் படையெடுப்பு வேலையை வெகு சிரமமாக செய்து விட்டது.

## தற்காப்புகள் நிலைநிற்கின்றன.

பிரிடனில் இருக்கும் நம் தற்காப்புகளில் ஏதாவது ஒரு பாகத்தையாவது தகர்த்து அங்கு, தான் கால்வைக்க இடம் செய்துகொள்ள ஜெர்மன் விமானப் படை செய்யும் பிரயத்தனத்தையும் நம் விமானப்படை தடுத்துக்கொண்டு இருக்கின்றது. நம் விமானப்படையானது அதன் பூர்ண பலத்தை இன்னும் அடையாவிடினும், விமான எதிர்ப்பு பீரங்கிகளுடன் சேர்ந்து நாஸியின் வெடிவீழ்ச்சிகள் குறிப்பிட்ட எந்த இடத்தையும் வெகு உக்ரமாகவும் தவறன்னியில் குறிவைத்துத் தாக்கமுடியாதபடி தடுத்துக்கொண்டும் இருக்கின்றது.

பிரான்ஸிலும், ஹாலந்திலும், உள்ள படையெடுப்பு துறைமுகங்களில் நாஸிகளுக்குள்ள ஆதிக்கத்தையே நம் விமானப்படையானது குறைத்துவிட்டபடியாலும் அவர்களுடைய உளவு சஞ்சாரங்களினால் எல்லா காரியங்களையும் தெரிந்துகொள்ளுகிறபடியாலும் திடீரென்று படையெடுப்பது என்பது முடியாது. நம் விமானப்படையை நாஸிகள் விரட்டியடிக்க முடிந்தால் நாஸிகள் அவர்கள் இஷ்டப்பட்ட காலத்தில் இஷ்டப்பட்டபடி படையெடுக்க முடியும். ஆயினும் யாராவது எவரையாவது துரத்தி அடிப்பதென்றால் நம் விமானப்படை ஜெர்மன் படையைத்தான் அவ்வாறு செய்யும்.

## கடற்படையைக் கவனிப்போம்.

ஜெர்மனிக்கு யுத்தக்கப்பல்கள் என்று ஒன்றும் கிடையாது. இதாலிய பிரஞ்சுப் படைகளை ஹிட்லர் உபயோகிப்பதென்றால் அவைகள் மத்திய தரைக் கடலில் அடைக்கப்பட்டு இருக்கிறது. இங்கிலீஷ் கால்வாயை கடக்க யத்தனிக்க எந்த சைன்யமும் பிரிடிஷ் கடற்படையின் பலத்திற்கு ஜவாப்பு சொல்ல வேண்டும்.

நம்முடைய கடல் ஆதிக்கத்தை முறிப்பதற்கு பிரான்ஸின் வடகரையில் ஏற்றப்பட்டிருக்கும் ஜெர்மன் தூரவீச்சு பீரங்கிகள் முயலும் என்று நினைக்கலாம். உண்மையில் அம்மாதிரி அல்ல. நம் கடற் படையிலும் தூரவீச்சு பீரங்கிகள் இருப்பதோடு நம் கடற்கரையிலும் அம்மாதிரி பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன.

எப்படிக்கிருந்தபோதிலும் நாஸி பீரங்கிக்காரர்கள் கடல் வழியே சப்பல்கள் போகமுடியாதபடி தடுக்கமுடியவில்லை என்பதற்குப் பிரதி தினமும் போய்க் கொண்டிருக்கும் வியாபாரக்கப்பல்களே சாக்ஷியமாகின்றன.

ஒருக்கால் படையெடுத்துவரும் போர்வீரர்களும் பரிசல்களும், சிறு புகைக் கப்பல்களும் பிரிடிஷ் ராணுவப் பாராவைக்கடந்து இங்கிலீஷ் கரையை அடைவ தாக வைத்துக்கொள்வோம். அந்தச் சமயம் பிரிடிஷ் தற்காப்பின் மற்ற இரண்டு கிளைகளான சைனியமும், உள்நாட்டு தற்காப்புபடையும் உடனே வேலைசெய்ய ஆரம்பித்துவிடும்.

முதலில் சைனியத்தைப்பற்றி கவனிப்போம். இந்தத் தேசத்திற்குள் இது வரையிலும் அறிந்திராத வெகு சக்திவாய்ந்த ஆயுதங்கள் உள்ளவும், மிகப்பெறிது மான சைனியத்தை பிரிடன் கொண்டிருக்கிறது என்று வற்புறுத்துவோம். குறைந்த பக்ஷம் 20-லக்ஷம் இளைஞர்கள் யுத்தத்துவக்கம் முதல் சைனியத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

யுத்த காலத்தில் சைனியங்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்துவது முறையல்ல. வெளிநாடுசென்ற பிரிடிஷ் சைனியத்தில் மூன்று லக்ஷம் போர் வீரர்கள் டன்கர்க் என்ற இடத்திலிருந்து மீட்கப்பட்டார்கள் என்பது நமக்கு ஞாபகமிருக்கிறது. பிரான்ஸ் யுத்தத்தை நிறுத்தினவுடன் மற்ற பிரிடிஷ் சைனியமும் திரும்பிவிட்டன. மேற்கொண்டு பல வயதுப்படி வகுப்பு வாரியாகச் சாதாரண ஜனங்களும் சைனியத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆஸ்ட்ரேலியாவிலிருந்தும் கனடாவி லிருந்தும் பல சைனியங்கள்வந்து இருக் கின்றன. ஜெர்மனியினால் ஜயிக்கப்பட்ட நாடுகளிலிருந்து பிரிடனுக்கு வந்து பிரிடனுக்கு உதவியாகப் பல சைனியங்கள் இருக்கின்றன.

இவையெல்லாம் சேர்ந்து நம்மனதைக்கவரத்தக்க ஒரு பெரிய சேனாபலத்தைக் காட்டுகிறது. சமீபத்தில் பிரிடனிலிருந்து மத்திய கிழக்குப் பிரதேசங்களுக்குப் போர்வீரர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. தேசத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமானது என்று அதிகாரிகளால் நிச்சயிக்கப்பட்ட அளவுக்குமேல் உள்ளவர்களைத்தான் அனுப்பியிருக்கிறார்கள். சேனாதிபதி ஜென ரல் வேவர் அவர்களின் கீழ் இருக்கும் சாம்ராஜ்யத்தின் சைனியத்துக்கு உதவி யாகவே இவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குப் பதிலாக இங்கு வேறு போர் வீரர்களும் தயாரிக்கப்படுகிறார்கள்.

## பயிற்சிக்கு அவகாசம்.

பிரெஞ்சு தேசமானது ஜெர்மனியுடன் தாத்கால சமாதானம் செய்து கொண் டது முதல் நம் சைனியம் வாளாவிருந்து வருகிறது. இந்தச் சமயத்தையும் நம் சைனியத்துக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் நார்வே பெல்ஜியம் முதலிய தேசங்களில் பெற்ற அனுபவத்தை ஒட்டி போதிய தந்திரங்கள் கற்பிப்பதிலும், புதிய ஆயுதங்களைப் பிரயோகிப்பதைக் கற்பிப்பதிலும் உபயோகப்படுத்தி இருக்கிறது.

இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து படையெடுக்கச் சென்ற வேனிற்காலத்தில் ஹிட்லர் செய்த பெரும் பிரயத்தனமானது கைகூடி இருந்தால் இன்றைக்காட்டிலும் அன்று சக்தியில் வெகு குறைவுள்ள சைனியம்தான் எதிர்த்து இருக்கும்.

## படையெடுப்பவரைத் தடுக்க பிரயத்தனம்.

அந்தச் சமயத்திலிருந்து தற்காப்பு உபாயங்களைப் பரிபூர்ணமாகச் செய்து முடிக்கப் போதிய அவகாசம் சைனியத்துக்கு இருந்தது. பீரங்கி ஸ்தாபனங்கள் கடற்கரையைச் சுற்றி இருக்கின்றன. விமான எதிர்ப்புப் பீரங்கிகள் தனியாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆகாயத்தின் வழியாகவும் கடல் வழியாகவும் தாக்கக் கூடிய ஒவ்வொரு கேந்திர ஸ்தானத்திலும் ஒவ்வொரு யந்திரத் துப்பாக்கிகள் கொண்ட ஒளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பொறிகளும், பீரங்கி மோட்டார்களும் எந்த இடத்திலிருந்தும் மற்றொரு இடத்திற்கு உடனே கொண்டுபோய் படையெடுப்பைத் தடுக்கக்கூடியவாறு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மேற் சொன்ன ஒவ்வொரு இடத்திலும் அந்தந்தக் காரியத்தை செய்யக்கூடிய பயிற்சியுடன் போர் வீரர்கள் இருக்கிறார்கள்.

பிரிடிஷ் தற்காப்பு உபாயத்தின் முக்கியமான அம்சம் என்னவென்றால் படையெடுத்து வரும் சைனியமானது ஊன்றிக் கொள்வதற்குள் அதை அமுக்கி விடவேண்டும் என்பதே. தற்காப்பில் குழப்பம் உண்டாகுவதற்காக ஜெர்மன் படைகளும் இறங்குவதற்கு சம்பாவிதமே. அதற்கு எதிராக பிரிடிஷ் செய்திருக்கும் உபாயம் என்னவென்றால், ஆங்காங்கு இறங்கக்கூடிய எதிரிபடைகள் ஒன்றுக்கொன்று சேர முடியாமல் அவையவைகளைத் தனித்து வைத்து அழித்துவிடுவதே. கடற் கரையில் நாஜிப் படை வந்தால் வ்யூகங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகற்றப் போதிய இடம் இராது. கரை பீரங்கிகளும், துப்பாக்கி சேகரங்களும், கரையேறிவரும் எதிரிகளை கொலை செய்யவே ஏற்பட்டிருக்கின்றன. வெறும் படு கொலை தான். பிரிடிஷ் சைனியம் எல்லாவிதமான துப்பாக்கி யந்திரங்களைப் பற்றியும் முக்கியமாக வெகு சமீபத்தில் வந்தவர்களைத் தாக்குவதற்கு வெகு உபயோகமானதும் சிகாகோ நகரத்தின் கொள்ளைக்காரர்களால் உபயோகப்படுத்தப்பட்டு வரும் "குட்டி பீரங்கி" என்ற ஒரு யந்திர துப்பாக்கியைப்பற்றியும் இவ்வளவு ஜாஸ்த்தியான கவனம் செலுத்துவது காரணம் இல்லாமல் இல்லை.

பிரிடிஷ் அதிகாரிகள் அவைகளில் சில விவரங்களை உலகத்திற்கு வெளியிட்டிருக்கிறார்கள். வெகு முக்கியமான விவரங்கள் பெரிய ராணுவ ரகசியங்களாக இருப்பதாலும் அவை எதிரிக்கு தெரியக்கூடாதாகையாலும் வெளிப்படுத்தவில்லை.

## உள் நாட்டு ரக்ஷணைப்படை:—

இம்மாதிரியான படையெடுப்புப் பிரயத்தினத்தில் ஹிட்லர் இப்பொழுது நமக்குப்பழக்கமாக இருக்கும் ஒரு உபாயத்தைக்கடைப்பிடிக்கலாம். அதாவது, தற்காப்பு சைனியத்தின் முன் அணிகளின் பின்பக்கம் விமானங்களிலிருந்து ஆகாய கூண்டுகள் (Parachute) மூலமாக ஆஸாமிகளை இறக்கலாம். இந்த உபாயம் ஹாலண்டு, பெல்ஜியத்திலும், வட பிரான்ஸிலும் வெகு உபயோகமாக

இருந்தது. விமானம் வழியே வந்த போர் வீரர்கள் போக்கு வரத்து சாதனங்களின் முக்கியமான சந்திகளிலும் அதாவது பாலங்கள் முதலியவைகளிலும் மர்ம ஸ்தானங்களாகிய விமான துறைமுகங்கள் முதலியவைகளிலும் அழிபடாமல் பாதுகார்த்துப்பிடித்துக்கொள்ள ஹேதுவாக இருந்தார்கள்.

படை யெடுப்போன் தன் எல்லையில் தோன்றின சில நிமிஷங்களுக்குள் தன் தேசத்தை யாவரும் கடக்க முடியாதபடி அணைக்கட்டுகளையும், பாலங்களையும், உடைத்து விடுவோம் என்று ஹாலந்து சைனியமானது ஹாலந்து படையெடுக்கப் படுவதற்கு முன் பெருமை பேசிக்கொண்டது. அப்பெரும் பேச்சும் வெறும் பேச்சாயிற்று. ஏனெனில், ஆகாய கூண்டுகாரர்களும், ஐந்தாம் படையாளர்களும் மேற்கண்டவாறு அழிப்பதற்காக ஏற்பட்டவர்களை அவர்கள் வேலையை செய்து முடிப்பதற்குள் கொன்றுவிட்டார்கள்.

பிரிடன் அந்தச்சம்பவத்திலிருந்து ஒரு நீதியைகற்றுக்கொண்டுவிட்டது. ஆகாய கூண்டுகாரன் மூலமோ, ஐந்தாம் படை மூலமோ, பின்பக்கம் ஏற்படும் பயத்துக்கு பிரத்யுபாயமாக உள்நாட்டு ரக்ஷகர் என்ற சைனியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

உள்நாட்டு ரக்ஷகர் என்ற சைனியம் பத்துலக்ஷம் பேர்களுக்குமேல் கொண்டது. மற்ற சைனியங்களுக்குக் கூப்பிடப்படமுடியாதவர்களைத்தான் இதில் சேர்த்திருக்கிறது. யாதொரு பிரதிப்பிரயோஜனமும் அன்றி அவர்கள் வேலை செய்கிறார்கள். அசல் சைனியத்தின் சில்லரை வேலைகளைச்செய்வதுதான் இதன் முக்கியமானவேலை. அதோடு அருகாமையில் இருக்கும் சைனியத்தின் கண்கள்போல இருந்து வெகுசீக்கிரமாக அந்தச்சைனியம் வேலைசெய்து எதிரி திடீரென்று கரையேறமுடியாமல் தடுப்பதற்கு உபயோகமாக இருக்கிறது.

சில சந்தர்பங்களில் எதிரி சைனியங்களைத்தாக்குவதற்கும் அதற்கு அதிகாரமுண்டு. முக்கியமாக புதிதாகக்கரையேறி இன்னும் ஸ்தாபித்துக்கொள்ளாமல் இருப்பவர்களைத் தாக்குவதற்கே.

இம்மாதிரி செய்வதற்காகத் துப்பாக்கிகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பதோடு, வாய்க்கால் பீரங்கிகளையும், பீரங்கி மோட்டாரை எதிற்கவல்ல உபாயங்களையும் பெட்ரோல் வெடிகுண்டையும் உபயோகிக்க வேண்டியபயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரான்ஸ் தேசத்திலுள்ள கிராமங்கள் ஒவ்வொன்றும் தற்காப்புக்குச் சரியானபடி பயிற்சி அளிக்கப்பட்டிருந்தால் வடபிரான்ஸின் குறுக்கே நாஸிகளின் சீக்கிரமான முற்போக்கானது தடுக்கப்பட்டு சிதறியும் போயிருக்கும் என்ற தீர்மானத்தின்பேரில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. பிரான்ஸ் தேசத்தில் இம்மாதிரியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளபடவில்லை. அதன் காரணமாக கிராமவாஸிகள் எதிரிகளை எதிர்ப்பதற்குப்பதிலாக வெளியேறி ஓடி தங்கள் சொந்தத்துருப்புகள் செல்லும் ரஸ்த்தாக்களிலேயே அடைந்துகொண்டார்கள். இம்மாதிரியான ஆபத்தைத்தடுப்பதற்காக உள்நாட்டு ரக்ஷண சைனியத்தை நகர வகுப்பென்றும், நாட்டு வகுப்பென்றும் பிரித்து ஒவ்வொருவருக்கும் குறிப்

பிட்டு ஒவ்வொரு பிரதேசம் பாதுகாக்கப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கடமைகளில் மற்றொரு அம்சம் என்னவென்றால், எதிரிகள் உபயோகப்படுத்தக்கூடிய ரஸ்தாக்களை நன்றாக அடைப்பது. இறங்கும் ஸ்தாபனங்களாகவும், அல்லது படையெடுக்கும் விமானங்களின் சாலைகளாகவும் உபயோகிக்கக்கூடிய வெட்டவெளிகளில் இடையூறுகள் ஏற்படுத்தி அவ்வாறு உபயோகம் இல்லாமல் செய்வது.

## இரவும் பகலும் பாரா.

இதன் முடிவு என்ன வென்றால் இரவும் பகலும் முழுதும் இங்கிலாந்தில் பாராக்கொடுத்துக் கொண்டே இருக்கிறது. எவ்விதமான தாக்குதல் ஏற்பட்டாலும் அதற்கு ஏற்றவாறு தடுக்கக் கூடிய சைனியங்களும், கொத்தளங்களும் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. மேலும், உலகத்திலேயே ரயில் ரோடும், ரஸ்தாக்களும் அதிகமாக உள்ள தேசம் இங்கிலாந்தே. ஆகையால் போக்குவரத்துக்குச் சாதனங்களை ஆகாயப் படை யெடுப்பாலேயாவது மற்ற உபாயங்களினாலோ கலைத்து விடுவது வெகு சிரமசாத்தியமான காரியம். எல்லாவற்றிற்கும் மேலாக நாசியத்தைத் துலைத்துவிட வேண்டும் என்று ஒன்று சேர்ந்து பிரிடன் தேசம் செய்து கொண்டிருக்கும் பெரிய பிரதிக்ஞையே வெகு பலத்தைத் தரக்கூடியது.

---

## ஹிட்லர் தெற்கே செல்வாரா?
## அவர் மத்யதரைக்கடலை அடைய விரும்புவதேன்?
## போக்கு வரத்து ஸாதனங்கள் விரிவுப்படுதலால் அபாயம்.
## ஸ்பெயினாவது, இதாலியாவது ஜெர்மன் சைனியத்திற்கு நல்வரவு கூறுவார்களா?

(என்று தலையங்கமிட்டு வர்னன் பார்ட்லெட் எழுதுகிறார்).

ஸர்வாதிகாரிகள் பெரிய சிந்தை, பேராசை உள்ளவர்கள். ஹிட்லரும் அவர்களில் ஒருவர் அல்லவா. தன்னுடைய ஜெஸ்டாபோ தூதர்களில் பெரும்பான்மையோர்போல், தானும் ஒரு காலம், இறக்கவேண்டும்; தனக்குப்பின், எவரும் தன்னை மறக்காதபடி ஒரு ஞாபகார்த்தமானதும் மஹத்தானதுமான காரியம் செய்து முடிக்கவும் வேண்டும் என்று இச்சைப் பட்டதுண்டு. அக்காலங்களில், அவர் தன்னுடைய ஸ்நேகிதர் ஒரு சிற்ப சாஸ்திரியை வைத்துக்கொண்டு, அதிகாலையில், பெர்லின்மாநகரைப் புதிதாக அமைக்க பிளான்கள் போடுவதைக் காணலாம். இப்பொழுதோ அப்பிளான்களை எல்லாம் தள்ளி வைத்துவிட்டு, மத்யதரைக்கடல், அப்பிராந்தம் இவைகளைக் குறித்துப் புதுப்பிளான்கள் தயாரிக்கிறார்.

முஸோலினி, ஹிட்லர் இவர்களுக்குள் நேசம் ஜாஸ்தியாக இல்லாமல் போனாலும், ஒருவர் தோல்வி அடைவதை மற்றொருவர் இச்சிக்கமாட்டார். ஜெர்மனி கூறின புத்திமதியை நிராகரித்து முஸோலினி கிரேக்கர்மேல் படை எடுத்தாலும், அதையும் சிந்தியாமல், **மத்யதரைக்கடல் ஆங்கிலேயர் கடலாக ஏற்பட்டு விடாதபடி பெரும் முயற்சிகளை ஹிட்லர் எடுக்கிறார்.**

இந்தியா, ஜப்பான், ஆஸ்ட்ரேலியா முதலிய தேசங்களுக்குச் செல்லும் கப்பல்கள், ஸூயஸ் கால்வாய் வழியாய் போகும்படி நேரிட்டால், அவைகளையும் தாக்கவேண்டி, ஹிட்லர் தன்னுடைய நீர்மூழ்கிகளை மத்யதரைக் கடலிலும் வைத்திருக்கவேண்டும். ஆனால் ஹிட்லர் என்ன செய்யக்கூடும்! இதாலியர்கள், இந்த யுத்தத்தில், தங்களுக்குப் பலன் ஒன்றும் இல்லை என்று அறிவார்கள். ஹிட்லரின் உபதேச வசனங்களும், பயமுறுத்தல்களும் அவர்களிடத்தில் செல்லாது; சண்டையில் எவ்வித ஊக்கமும் கிளப்பாது. அபிஸீனியாவிலும் இதாலியர்கள் ஏமாந்து விட்டார்கள். அதை ஜயித்தால் ஏராளமான பொருள்கள் கிடைக்குமென்று சண்டையில் உற்சாகப்படுத்தப்பட்டவர்கள். அபிஸீனியாவைப் பிடித்தும் புண்யம் இல்லை. அந்த தேசத்தார்களோ மிகவும் வெறுப்புடனும், விரோதத்துடனும் இதாலியர்களைப் பகைக்கிறார்கள். இதாலி இச் சண்டையில் சேருமுன், பிரான்ஸுக்குச் சொந்தமான, ட்யூனிஸ், கார்ஸிகா, நைஸ், ஸாவாய் ஆகிய நகரங்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டும் என்ற கூக்குரலைப் போடும்படி முஸோலினி தன்னுடைய ஜனங்களைக் கிளப்பினார்; ஆனால், நடப்பு என்ன, ஜெர்மானியர்கள்தான் பிரான்ஸ் தேசத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள். இதாலியர்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டும், பசியால் பீடிக்கப்பட்டு வரும் காலத்தில், மற்றொருவர் (ஹிட்லர்) பேச்சைக்கேட்டுத் தங்களைச் சண்டையில் இறங்கச் சொன்னாரே முஸோலினி என்பதில் இதாலியர்களுக்கு மனவெறுப்பும் உண்டு; கூலி, வெகுமானம் இவைகளைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம், இன்று வேலையைச்செய், என்கிற கொள்கையும் உற்சாகத்திற்கிடம் கொடுக்கவில்லை.

கடைசி முடிவு என்ன; இதாலி தோல்வி அடையப்பட்டது. ஆனால் அதை இதாலியர்கள் இப்பொழுது ஒப்பமாட்டார்கள்; இன்னும் ஏராளமான, பிரிடிஷ், இதாலியர்கள் இவர்களில் உயிர்ச்சேதம் ஏற்பட்ட பிறகுதான், ஒப்புக்கொள்ளுவார்கள். மத்யதரைக் கடலில் இருந்து பிரிடிஷ் ஆதிக்கத்தை எவ்விதம் அஸித்தி செய்வது என்பதைப்பற்றி ஹிட்லர் சிந்திக்கவேண்டும். ப்ரென்னர் வழியாய் துருப்புகள் அனுப்புவது வீண் செலவுதான், நிஷ்ப்ரயோஜனமாக முடியும். மேலும், அவ்விதம் செய்தால், ஏதோ தங்களை ஜயித்து, அதை அநுசரித்து ஜயித்தவர்கள் முறையில் சைனியம் ஸ்தாபிப்பதுபோல், இதாலியர்கள் நினைக்கக்கூடும்; இதைக் காட்டிலும் வேறு வினை வேண்டாம்; உடனே இதாலியர்கள் பிரிடிஷ் கக்ஷியில் சேர்ந்துகொள்ள வேறு தூண்டுதல் தேவை இல்லை.

இஸ்தன்புல்லுக்கு வரும் ரஸ்தாவையும் கிரேக்கர்கள் அடைத்து விட்டார்கள். இந்த ரஸ்தாவின் வழியாகத்தான் படையெடுக்க கெய்ஸர் வில்ஹெல்ம் அக்காலத்தில் தீவிரமாக இருந்தார். பால்கன் நாடுகள் வழியே படைஎடுப்பது மிகவும் சும்பத்தனம் என்று ஹிட்லர் அறிவார். அவ்விதம் செய்தால், துருக்கியும், யூகோஸ்லாவியாவும், ஹிட்லருக்கு விரோதி ஆவார்கள். இவைகளையும் மீறி மத்யதரைக்கடல் வந்து சேர்ந்தால், அங்கு பூர்ண ஆதிக்கம்பெற்று க்ரீட் முதலிய தீவுகளில் பலமாக ஸ்தாபனம் அடைந்த ஆங்கிலேயர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் மற்றொருயோசனை, ப்ரான்ஸ், ஸ்பெயின் இந்ததேசங்கள் மூலம் செல்லலாமா? செத்துப்பிழைத்த பீர் லவாலின் கதையை நோக்குங்கால், இரண்டு விஷயங்கள் வெளியாகின்றன. மார்ஷல் பிடென், எவ்வளவு உண்மையான தேசபக்தி உள்ளவராயினும், ஹிட்லர் சொல்லுகிறபடி நடிப்பவர் என்பது ஒன்று, தங்களுடைய தேசத்தை மிகவும் இழிவான ஒப்படைப்புக்குப் பாத்ரமாக்க பிரான்ஸ் தேசத்தார்கள் தயாரக இல்லை என்பது மற்றொன்று.

ஜெர்மானியர்கள், மார்ஸேல்ஸ் அல்லது ட்யூலான் இவைகளை நோக்கி ஒருக்கால் செல்லலாம்; அதைப் பிரான்ஸ் தடுக்க இயலாது. ஆனால் ஒன்று நிச்சயம்; 'விஷி' நிர்வாஹத்திற்கும் ஸ்வேச்சாதிகாரம் இல்லை. அதற்கு யஜமானத்வம் கிடையாது. இதன் ப்ரயோஜனம் என்ன? ஜெர்மானியர்கள் தெற்குநோக்கி மார்ஸேல்ஸ் புறம்வந்தால், பிரான்ஸ் குடியேறிய நாடுகளும் கப்பற்படையும் பிரிடிஷார் உடன் சேர்ந்து ஜெர்மனியை நிச்சயமாக எதிர்க்கும் என்பதையும் ஹிட்லர் அறிவார். "சத்ரு கையில் சிக்கிக்கொண்ட சேனைத்தலைவன் தன்னுடைய சைனியத்திற்கு உத்தரவுகள் கொடுக்கும் உரிமையை இழந்து விடுகிறான்; அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது குற்றம்" என்று நெப்போலியன் எழுதியிருக்கிறார்.

ஜெர்மன் சைனியம் ஸ்பெயின் தேசத்திற்குச் செல்லக்கூடும்; ஆனால் ஸ்பெயினில் ஜனங்கள் பசியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்; யுத்தம் புரிய தகுந்த ராணுவ ஸாதனங்களும் அவர்களிடம் கிடையாது.

இந்த ஸ்திதியில், கொஞ்சகாலத்திற்குள் ஸ்பெயின் தேசமூலமாக மத்ய தரைக்கடலை அடையலாம் என்று ஹிட்லர் நம்பலாம், அப்பொழுது பலாஞ்சிஸ்ட் கக்ஷியார்கள் தன்னை ஆதரிப்பார்கள் என்றும் நினைக்கலாம். டாஞ்கியர் நிர்வாஹத்திலிருந்து அயல் நாட்டார்களை யாதொரு முன் எச்சரிக்கை அன்னியில் ஸ்பெயின் கவர்ன்மெண்டு, விரட்டி விட்டதிலிருந்து, ஜிப்ரால்டரை நோக்கி, ஸ்பெயின்தேசம் மூலம் படை எடுப்பதில் ஹிட்லர் சற்று ஊக்கமும், தைர்யமும் அடையக்கூடும்.

நார்வேயிலுள்ள அப்பாவிகளான சிறிய கிராமங்களிலேயே ஜெர்மானியப் பட்டாளங்கள் ஜம்பம் பலிக்கவில்லை, மனந்தளர்ந்து திண்டாடுகிறார்கள்; இதாலியர்கள் மனப்பான்மை எப்படி உள்ளது என்பதுதான் தெரியும்; இப்படிக்கிருக்க, ஒருக்கால் ஜெர்மன் படைகள் ஸ்பெயினில் சென்று ஸ்தாபித்துக்கொண்டால், நார்வே, இதாலி, இவைகளைக்காட்டிலும், மஹத்தான கொடுங்கிளர்ச்சிகள் ஸம்பவிக்கும். நிற்க, நெப்போலியன் மாஸ்கோ சென்ற கோலத்தை அறிந்த எந்தத்தலைவன்தான், சிநேஹக்குறைவு உள்ள தேசத்தின் வழியே, நூற்றுக்கணக்கான மைல்கள் தன்னுடைய போக்குவரத்து ஸாதனங்களைப் பரப்பிவைப்பான்! மேற்கண்ட விஷயங்களை உணர்ந்த ஹிட்லர், மத்யதரைக்கடல் பிளானைப்படிப் பதிலிருந்து, திருப்தி அடையமாட்டார் என்பதுதான் என் முடிவான அபிப்பிராயம்.

---

## ஏன் ஜப்பான் அமெரிக்கன் ஐக்கிய நாடுகளுடன் சண்டையை விரும்பவில்லை?
## பொருளாதார நெருக்கடி சண்டையை துரிதப்படுத்திவிடுமா?
## ஜெர்மனி ஜயிக்குமென்ற டோகியோவின் எண்ணங்கள்!
## கீழ ஆசியா நாடுகள் தலைமைவகிக்க ஏற்பாடுகள்.

(ஷாங்ஹை டெயிலி டெலிகிராப் நிருபர் தந்தி அடிப்பதாவது).

**சா**தாரணமாக நம்பப்படுவதுபோல் ஜப்பானும் ஐக்கிய நாடுகளும் சண்டை செய்யும்படி அவ்வளவு நெருக்கடியில் இல்லை யென்ற ஒருவாரான நிச்சய புத்தியுடன் ஜப்பானில் இரண்டு வாரம் தங்கி திரும்பி வந்திருக்கிறேன்.

இப்பவும் அங்கே பழைய தகரார்கள் குழப்பங்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. அதுபோலவே, ஜப்பான் தென்புறம் விரிவுற இடங்கொடுக்காது ஐக்கிய நாடுகள் அத்துடன் சண்டை செய்யுமா செய்யாதா என்ற பெரிய பிரச்னைகளும் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஜப்பானுடைய பலாபலம், பயம், பேராசை இவைகள் முன்னைவிட பலமாகவே நின்றுவருகிறது.

ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் சண்டை நேர்ந்தால் அது அடியில் குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டுமே ஏற்படக்கூடியதென்று மதியூகிகளில் அநேகர் ஒத்துக்கொள்ளுகிறார்கள். முதலில், தெற்கு பஸிபிக்கில் ஜப்பானின் தைரிய பிரவேசமும், இரண்டாவதாக, ஐரோப்பிய யுத்தத்தில் அமெரிக்கா நுழைவதும் ஆகும்.

இந்த முக்கிய விஷயங்களை கவனிப்பது பூர்வமாக, ஜப்பான் அமெரிக்காவின் பொருத்தம் இந்தவிதமோ அந்தவிதமோ என்று நிர்த்தாரணம் செய்ய அறிகுறியான ஜப்பானிலுள்ள நிலைகளின் உண்மைகள் சில இங்கே சொல்லப்படுகிறது.

ஜப்பானில் ஐக்கிய நாடுகளுடன் சண்டை செய்ய விருப்பமுள்ளவர் ஒருவர் கூட இல்லை என்று சொல்லலாம். இருந்தாலும், கீழ ஆசியாவில் புதிய கோட்பாட்டுக்கு ஆங்கிலேய அமெரிக்க எதிர்ப்பை நிவர்த்திக்க இப்படி சண்டை ஒன்று அவசியமாக முடிவில் வருமென்று அநேக ஜப்பானியர்கள் நம்புகிறார்கள்.

ஐரோப்பாவில் ஜெர்மனி முடிவில் வெற்றிபெற்றால் இருக்கும் நிலைமை தங்களுக்கு சாதகமாகுமென்றும், ஒருக்கால் ஐக்கிய நாடுகள் தாமாகவே தூரக்கிழக்குப் பிரதேசங்களிலிருந்து பின்வாங்கிக்கொள்ள நேரிடுமென்றும் ஜப்பான் எண்ணி, தான் அமெரிக்காவுடன் யுத்தத்தில் இறங்கும் நாளைக் கூடிய மட்டில் ஒதுக்க நினைக்கிறது.

தவிர, சரியான ஒத்தாசையில்லாமல் ஜப்பான் தற்பொழுது ஐக்கிய நாடுகளுடன் சண்டை செய்து வெற்றிபெற முடியாதென்ற நினைவு ஜப்பானியர்கள் அநேகருக்கும் இருக்கச்செய்கிறது. அங்கேயே கடக்க முடியாதபடி கீழ ஆசியா கண்டத்தின் தடுமாற்றமான பிரச்னைகளில் இவ்விராஜ்யத்தின் முயற்சிகள் பூராவும் அமுழ்ந்திக் கிடக்கிறது.

ஜப்பானின் ஆசியா தலைமைக்காரிய பிரகடனமும், பொருளாதார சௌகரியமும் திட்டப்படி ஒடினாலும்கூட ஜப்பான் ஐக்கிய நாடுகளை ஒருவாறு சம நிலையில் எதிர்த்துச் சண்டைபோட நினைக்க குறைந்தது பத்து வருஷம் வேண்டும்.

இருந்தாலும் அமைதியான உண்மை விஷயங்கள் இவ்விதமிருப்பதற்குப் புறம்பாகவே, முடிவில் கீர்த்தியோ அபஜயமோ எதுவானாலும் சரி, ஜப்பானிய ஜனங்கள் தாங்கள் கீழ் நாட்டில் போட்ட காரிய பிரகடனப்படி முடித்து விடவே எந்தக்காலத்தைக் காட்டிலும் இப்பொழுது அதிக தீவிரத்துடன் இருந்து வருகிறார்கள். ஏற்கனவே அமெரிக்கா செய்யும் பொருளாதார ராஜரீக இடைஞ்சல்கள் நிதர்சனமானபடி முடிவுகளை உண்டாக்குவது தெரிந்தும், ஜப்பானியர்களை, ராணுவமல்லாத மற்ற எத்தகைய நெருக்கடியும் தங்கள் முடிவான நோக்கங்களிருந்து திருப்பக்கூடியதில்லை.

அது ஜப்பானின் உற்பத்தி சக்தியை மிகவும் குறைபடுத்தச் செய்திருப்பதுடன், அதன் பொருளாதார முறையையும் நிலைகுலையச் செய்திருக்கிறது. நிச்சயமாய் அது தெற்குநோக்கிச் செல்வதை தடையும் தாமதமும் செய்து விட்டது.

ஐக்கிய நாடுகளுடன் யுத்தத்திற்குப் பயப்படாமலிருந்தால், ஜப்பானியர்கள், படையெடுப்பினாலோ அல்லது ராஜரீக வெற்றி மூலமோ, கீழ்டச்சு இந்திய நாடுகளின் எஜமான்களாக இத்தனை நாட்களுக்குள் ஆகியிருப்பார்களென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. டச்சு இந்தியாவில் தங்களுக்குப் பொருளாதார சமபந்தமாய் மட்டுமே காரியமிருப்பதுபோல் ஜப்பானிய ராஜாங்கத் தலைமை அதிகாரிகள் சொல்லும் சாந்தமான உறுதிமொழிகளை நிஜமாக எடுத்துக்கொள்ளக்கூடியதில்லை.

தற்சமயம் கேவலம் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பினும், ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் தங்களுக்கு ராஜரீக தலைமைக்குக் குறைவாக எதுவும் திருப்தி செய்யாதென்பதை வியக்தமாகத் தெரிவிக்கச் செய்திருக்கிறார்கள். டச்சு கீழ் இந்தியப் பிரதேசங்களை தனக்குள் அடக்கிக்கொள்ள ஒரு சரியான தருணத்தை எதிர்பார்த்துத் தாமதம் செய்யப்பட்டு வருகிறது. ஏதன் மத்தியில் பெட்டேவியாவிலுள்ள ஜப்பானிய பிரதானி, அமர்ந்த தளர்ந்த ராஜ்யதூதர் கெஞ்சிக்கி யோஷிஸாவா ராஜதூதகாரிய நேர்முறையில் டச்சுக்காரரிடமிருந்து கிடைத்தமட்டும் பறித்துக்கொள்ள முயற்சிசெய்து வருகிறார்.

அமெரிக்கன் பொதுஜன அபிப்பிராயங்களுக்கு விரோதமாக, அமெரிக்கா செய்யும் பொருளாதார நெருக்கடியை அதிகப்படுத்துவது மூலமாகவே ஜப்பானை சண்டையிலிறங்கத் தூண்டுமென்பதற்கு அறிகுறிகள் ஜப்பானில் ஒன்றுமில்லை. வாஸ்தவத்தில், ஜப்பானியர்கள் அமெரிக்கன் தடைகளை மற்றும் பெரிதாகவும் விரிவாகவும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனபோதிலும், இந்தத்தடவை ஐக்கிய நாடுகளுடன் ராணுவப்போர் ஏற்படாதபடி காத்துக்கொள்ள மிகவும் கவலையுற்றிருப்பதால், அமெரிக்கா செய்யும் பொருளாதார சவுக்கடியை சண்டை செய்யாமல் எவ்வளவு வேண்டு மானுலும் ஜப்பானியர்கள் அனுமதிப்பார்களென்று தோற்றுகிறது.

பொருளாதார நெருக்கடி கீழ் இந்தியாவின்பேரில் ஜப்பானிய படை யெடுப்பை திடீரென்று உண்டாக்கக்கூடியதென்ற அபாயம் எப்பொழுதும் இருந்து வருவது உண்மையே; இதுவும், டச்சு இந்தியாவும், பிரிடிஷ் மலாயாவும் ஜப்பானுக்குச் செல்லும் எண்ணெய் இரும்பு உலோகங்களைத் தேக்கச்செய்தால், உண்டாக்குவது சம்பாவிதமாகும்.

தன் தேசம் ஜீவித்திருப்பதும் சாவதும் ஐரோப்பாவில் ஜெர்மனியின் வெற்றியைப் பொருத்தேயிருக்கிறதென்ற தீர்மானம் ஜப்பானியர்களுக்கு மேன் மேலும் உறுதிப்பட்டுக்கொண்டுவருகிறது.

---

# ரூஸ்வெல்டும், 1941-ம் வருஷமும்.

---

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று 'குடும்பப்பேச்சு' என்ற தலையங்கம் வைத்து அமெரிக்கர்களுக்கு பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் விடுத்த செய்தியானது தைரியத் தைக்கொடுப்பதோடு, வரப்போகும் ஆபத்துக்கு எச்சரிக்கையாயுமிருக்கிறது. அச்சு நாடுகள் ஒரு நாளும் ஜயிக்கப்போவதில்லையென்று உறுதிமொழி சொல்லி விட்டு, அதோடு, 'ஆபத்தும் இனிவரும், நாம் அதற்குத் தயாராயிருக்கவேண்டும்" என்றும் தீர்மானமாய், உள்ளதை மறைக்காமல், எடுத்துச்சொன்னர். ஏதோ ஒரு இயற்கைச்சக்தியால், அச்சு நாடுகள் தாமாகவே தோல்வியடைந்துபோக மாட்டா, அவைகளுடைய பேராசை என்ற ஆபத்துக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிற எல்லா தேசத்தாரும், ஏகோபித்த மனதோடு, முடிந்த வரையில் உழைப்பதினுலும், தியாகம் செய்வதாலும்தான் அவைகளைத்தோற்கடிக்க முடியுமென்றும், அச்சு நாடுகளின் பேராசையால் பாதிக்கப்படுகிறவர்கள் உலகத்தில் வசிக்கும் பெரும்பான்மையோரென்றும் சொன்னர்.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் இப்பொழுது உலகத்தில் வசிப்பவர்களில் முதன் மையான புருஷர்களில் ஒருவர். அவர் தன் தேசத்தார்களுக்கென்று அன்று இந்தச் செய்தியை விடுத்தாலும், அதை உலகத்தில் கேட்டவர்கள், படித்தவர்கள் மனதிலெல்லாம் நன்ருய்ப்பட்டிருக்கிறது. ஹிட்லர் மனதிலும் பட்டு, அமெரிக் காவில் தான் செய்த பொய்ப்பிரசாரமும், சூழ்ச்சியும் வீணுயிற்றென்று மனம் கசந்து, எரிச்சல் கொண்டு, பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சொன்னதை மறுத்து, 'நான் அட்லாண்டிக்குக்கு அக்கரையிலுள்ள தேசங்களைப்பிடிக்க நினைக்க வெயில்லையே' என்று பதில் சொல்லியிருக்கிருர். இதற்கு மறுமொழியை பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஒரே வார்த்தையிலடக்கிவிட்டார். ஹிட்லர் சொல்லுவதெல்லாம் 'பிதற்றல்', என்ருர்.

அமெரிக்காவில் சிலர்கள் 'சமாதானக்கக்ஷி'யைச்சேர்ந்தவர்கள். இவர்கள் பேச்சு யெடுபடாது போனதற்குக்காரணம் கொள்ளைக்கார அச்சு நாடுகளின் அக்கிரமங்களேயாகும். ஆணித்தரமாக பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் நாஸிதத்துவத்தைக் கண்டித்தது மற்றொரு காரணமாகும். வெளியூர்ச்சண்டைகளில் தலையிட்டுக்கொள்ளக்கூடாதென்று மற்றொரு கக்ஷியும், அமெரிக்காவிலுண்டு. இது ஒரு பலத்த கக்ஷி. எந்தத் தேசத்திலும் இம்மாதிரியான கக்ஷிக்கு அபிமான மேற்படுவது சகஜம்தான். ஆனால் உலகத்தில் பிறர் யுத்தங்களில் சம்பந்தப்படாது ஒதுங்கி நிற்பது அசாத்தியமானகாரியம். மாஜினோ அரணனது மகத்தான கோட்டைதான்: ஆனால் அதனால் பிரான்ஸுக்கு வெற்றி யேற்படவில்லை. அதேமாதிரி அமெரிக்கர்கள் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைத் தங்களுக்கு அரணாக நினைத்தார்கள். ஆனால் அதில் பிரிடிஷ் கப்பற்படை நின்று எதிர்க்கும் வரையில்தான் அது ஒரு அரணாகும்; இல்லாவிடில், ஜெர்மானியர் மாஜினோ அரணை வளைத்துக்கொண்டதுபோல் அட்லாண்டிக்கையும் வளைத்துக் கொள்ளுவார்கள். இங்கிலீஷ்-கால்வாயும் (சானலும்) ஒரு அரண் தான். அதைத் தாண்டி பிரிடனை எதிர்க்க மூர்க்க நாஸிகள் நினைத்தார்கள். நல்ல வேளையாய் பிரிடன் சமயத்தில் விழித்துக்கொண்டு, யுத்தம் செய்து சானல் (கால்வாய்) வழியை மறித்துவிட்டது. நெடுநாளாய் இங்கிலாந்தைப் படையெடுக்கமுடியாதென்ற கோட்பாடுகளை நம்பிக்கொண்டு சும்மாயிராமல், மிகப்பெரிய பிரயத்தினங்களைச்செய்து பிரிடன் எதிர்த்து நிற்கிறது.

ஹிமய பர்வதமென்ற இயற்கை அரண் இந்தியாவுக்கிருப்பதுண்மையே. ஆனால் ஜெர்மனியின் காட்டுமிருண்டித்தனமென்ற வெள்ளப்பிரவாகம் கரை புரண்டு வந்துகொண்டிருக்கிறது. நாம் அதை முன்னதாகவே தடுக்காமல் போனால் நுழைவதற்குப்பாதையை எதிரியானவன் தேடி விடுவான். எங்கெங்கே ஆபத்துக் கிளம்புகிறதோ அங்கங்கே யுத்தம் செய்து பிரிடனும், பிரிடிஷ் சாம்ராஜ்யமும், பிரிடிஷ் நேயர்களும் வெற்றியடைய முடியுமென்று 1940-ம் வருஷ யுத்தத்திலிருந்து வெளியாய் விட்டது. 1941-ம் வருஷத்தில், வெகு சீக்கிரமாக எதிரி நம்மை மறுபடியும் எதிர்க்கலாம்; அதையும் நாம் உறுதியோடு எதிர்க்கவேண்டும்.

---

## கதம்பம்.

1. "முகம்மதியர்களே, என்னுடைய வார்த்தைகளை, உங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும், எல்லைப்புறத்திலிருக்கும் ஆட்டிடையர்களுக்கும் பரவும்படி செய்யுங்கள். நான் வாக்குத்தத்தம் செய்வது அபூர்வம். ஆனால் நான் வாக்குக் கொடுத்தால், அந்தப்படி நடந்தே தீருவேன்." (பெனிடோ முஸோலினி, டிரிபோலி, மார்ச்சு 1937).

2. "ஐக்கிய நாடுகள் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் விலகியிருப்பார்களேயாகில் அதற்கு நாம், கனடா, ந்யூபௌண்ட்லந்து, பகாமாஸ், பெர்மூடா, ஜமேய்க்கா, ஆஸ்த்ரேலியா, ந்யூஸிலாந்து ஆகிய இந்நாடுகளைக்கொடுப்போம்." (பொபாலோ டி இதாலியாவில் டாக்டர் மேரியோ அப்பெலியஸ், டிஸம்பர் கடைசியில்).

3. "நாளையதினம் இந்தியாவின் மேல் படையெடுப்பு ஏற்பட்டு, என்னுடைய தேசத்தைப்பாதுகாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் நான் ஆயுதங்களை எடுத்து யுத்தம் செய்யத்தயாராக இருக்கிறேன்." (மௌலானா அபுல் கலாம் அஸாத், லாகூர், டிஸம்பர் 30, 1940).

4. "சைனாவில் மார்ஷல் சியாங்கே ஷேக்கின் ஆளுகை ஒழிந்துவிடுமென்பது இப்பொழுது நடக்கக்கூடியதல்ல." (சிசி சிசி ஷிம்பம் என்பதில் தளகர்த்தர் மாட்ஸூயி என்பவர் சொல்லியதை மாஸ்கோவில் பேசியது, டிஸம்பர் 30, 1940).

5. "நம் சார்பாகத் திரும்பியிருக்கும் யுத்தப்போக்கு நம்மை நமக்கு அனுகுணமான யுத்தரங்கத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து நாம் வெகுநாளாக எதிர்பார்க்கும் வெற்றியை அளிக்கும்." (ந்யூஸிலாந்து பிரதம மந்திரி மிஸ்டர் ப்ரேஸர், ஒலிபரப்பில், டிஸம்பர் 30, 1940).

6 "பார்டியா விழுந்தது ஒரு பயங்கரமான எச்சரிக்கை. அலக்ஷியமாக இருப்பவர்களுக்கு இதுதான் கதி." (இதாலிய சைனியங்களுக்கு ஆன்ஸால்டோ, என்பவர் செய்த ஒலிபரப்பு, ஜனவரி 7, 1941).

7. "மனிதவர்க்கத்துக்குக் கொடிய சத்துருவான பாலைவனத்தை பிரிடிஷ்காரர்கள் ஒரு ஸ்நேகிதனாக மாற்றிவிட்டார்கள்." (நாஸி ஒலிபரப்புக்காரன், ஜனவரி 7, 1941).

8. "பாச்சிகை உருட்டியாய் விட்டது. யுத்தம் ஆரம்பிக்கப்போகிறோம் என்று சொல்லாமலே நாம் யுத்தத்தில் இறங்கிவிட்டோம்." (டெட்ராயிப்ரீ பத்திரிகை, அமெரிக்கா, ஜனவரி 7, 1941).

9 "எகிப்துக்காக இந்தியர்கள் உயிர்துறந்திருக்கிறார்கள். எங்களுடைய நன்மைக்காகவும் எங்கள் சார்பாகவும் அவர்கள் செய்த வீரச்செயல்களை எங்கள் நாட்டில் என்றும் நாங்கள் மறக்கமாட்டோம்." (எகிப்து பிரதம மந்திரி, ஹாஸ்ஸான் ஸிரி பாஷா, ஜனவரி 10, 1941-ல் ஸர் ஸிக்கந்தர் ஹயத்கானுக்கு அனுப்பிய செய்தி).

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

(டிஸம்பர் 30உ முதல் ஜனவரி 5உ வரை.)

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### புதுவருஷத்திய விருப்பங்கள்.

3,000 வார்த்தைகளடங்கிய புதுவருஷ அறிக்கையொன்றை ஹிட்லர் ஜெர்மானியருக்கு விடுத்திருக்கிறார். அதில், ஏற்கனவே நடந்த சம்பவங்களைப் பற்றிச்சொல்லியிருக்கிற சிலவற்றை இங்கு ஆராய்ச்சி செய்வோம்.

### 'நான் ஒன்றையும் அபேக்ஷிக்கவில்லை.

இங்கிலாந்தோடும், பிரான்ஸோடும் யுத்த மேற்படாதிருக்க நான் 1939-ல் செய்த பிரயத்தனமெல்லாம் ஜனநாயக தேசங்களால் நிராகரிக்கப்பட்டன

இங்கிலாந்து, பிரான்ஸுக்குச் சொந்தமான எதையும் கேட்கவில்லை. இது முற்றும் அநாவசியமான யுத்தம்' என்று ஹிட்லர் சொல்லுகிறார்.

உண்மையில், ஹிட்லர் போலண்டைப் படையெடுக்காமலிருந்தால் யுத்த மேற்பட்டிருக்காது. இது ஜெர்மனிக்கும் நன்றாய்த் தெரிந்திருந்தும் படையெடுப்பதற்கு ஒரு வாரத்துக்குமுன் ருஷ்யாவோடு ஒப்பந்தம் செய்துகொண்டது, அப்பொழுது இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கும் சொந்தமான எதையும் கேட்காததற்குக் காரணம் ஹிட்லருக்குப் பலக்குறைவுதான்.

'1939 அக்டோபர் 6-ம் தேதியன்று கூட, மறுபடியும் இங்கிலாந்தையும். பிரான்ஸையும் சமாதானத்துக்கழைத்தேன்; ஆனால் என் பிரயத்தனம் வீணாயிற்று' என்று ஹிட்லர் மேலும் சொல்லுகிறார்.

நேயக்கக்ஷி சமாதானத்துக்கு வராத காரணம் ஹிட்லர் போலண்டை விடாததுதான். தங்கள் மானத்தையும், பாதுகாப்பையும் உத்தேசித்து இவர்கள் யுத்தத்தை நிறுத்தவில்லை.

'டச்சு, பெல்ஜிய, பிரெஞ்சு சைன்யங்களுக்குப்பின் மறைந்து கொண்டு பிரிடிஷ் துருப்புகள் முதலிலேயே போர்முனையிலிருந்து வெளியேறி விட்டன' என்று ஹிட்லர் குற்றம் கண்டுபிடிக்கிறார்.

வெளியேறுமுத்தேசமிருந்தால் பிரிடிஷ் துருப்புகள் ஆரம்பத்தில் வந்திருக்குமா? மேலும், இவை விலகிக் கொண்டபோது, ஏற்கனவே, டச்சுத்துருப்புகள் சண்டையை நிறுத்திவிட்டன, பெல்ஜிய அரசர் சரணாகதியடைந்து விட்டார், பிரெஞ்சுத்துருப்புகள் மற்றொருவிடத்தில் சண்டை செய்துகொண்டிருந்தன.

## இதாலிக்கு இருப்பிடம்.

போதுமான வாசஸ்தலத்துக்காக 100-வருஷங்களாகச் செய்துவரும் போராட்டம் இப்பொழுதுதான் பலிக்கப்போவதாக இதாலியக் கல்வி மந்திரி பிளாரன்ஸில் பேசியதாக ஜனவரி 2-ம் தேதி ஜெர்மன் ரேடியோ சொல்லுகிறது.

யுத்தம் ஆரம்பித்தபோது இதாலிக்கு ஜனத்தொகை உலகத்தில் 100-க்கு 2·5பங்கு; அதன் விஸ்தீர்ணம் உலகத்தில் 100-க்கு 2·8 பங்கு; அதாவது வாசம்செய்ய பூமி அதற்கு வேண்டியதற்கதிகமாகவே யிருந்தது.

இதாலிக்கு வேண்டிய அளவுக்குமேல் இடமிருப்பதாக, 'இருக்க இடம்' என்ற விஷயத்தைப்பற்றிய கட்டுரையில் பிரஸ்லா ஸர்வகலாசாலை போதகர் ஓபட் எழுதியிருக்கிறார்.

'அபீஸீனியாவைப் பிடித்ததிலிருந்து இதாலியானது திருப்தியடைந்த தேசங்களிலொன்றாக ஆய்விட்டது' என்று 1936-ம் வருஷம் மே-மாதம் 5-ம் தேதி முஸோலினியே சொல்லியிருக்கிறார். இப்பொழுது திருப்தியில்லாத பேராசைக்காரர்களோடு சேர்ந்துவிட்டார்.

## ஸ்பெயினும் டாங்கியரும்.

ஸ்பெயின் டாங்கியரைப் பிடித்துக்கொண்டதற்குக் காரணம் அச்சுநாடுகளல்லவென்றும், ஸ்பெயின் போராடிய 'விடுதலை யுத்தத்தில்' சகாயம் செய்த அச்சு நாடுகள் டாங்கியரில் ஸ்பெயினுக்குள்ள பாத்தியத்தை ஒப்புக்கொள்ளுமென்றும் ஸீனர் ஸுனர் சொன்ன சில வார்த்தைகளை மாற்றி வியாக்கியானம் செய்யப்படுகிறது.

ஆனால் டாங்கியரின் நிலைமை கெட்டதற்கும், உடனே நடவடிக்கைகளெடுக்க நேர்ந்ததற்கும் காரணம் இதாலியானது தன்னுடைய கப்பற்படையை அங்கு நிறுத்தச்செய்த முயற்சிதான்.

## என்ன பொய்!

மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களை இதாலிய யுத்தக் கப்பல்கள் தடுத்துவிடுவதால் இங்கு வேலையில்லாத இதாலிய நீர்மூழ்கிகள், ஜெர்மன் நீர்மூழ்கிகளைப்போல், அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் சண்டை செய்கின்றனவாம்.

# B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

## பிரிடனில் ஆகார நிலைமை.

பிரிடிஷ்-உணவு-இலாகா-மந்திரி சொன்ன சில வார்த்தைகளைச் சுட்டிக் காட்டி, பிரிடனுக்கு உணவுப்பொருள்கள் வெளியேயிருந்து வருவதில் ஏதோ தடையிருப்பதுபோல் ஜெர்மனி ஜனவரி 2-ல் ஒலிபரப்பியிருக்கிறது. 1938 அக்டோபர் 30-தேதியோடு முடிவான 10-மாதங்களில் இறக்குமதியான சரக்குகளில் 100-க்கு 46·5 பங்கு உணவு, பானம், புகையிலையாகும்; 1939-ல் இதே 10-மாதங்களில் இவை 100-க்கு 44·4 பங்கு; 1940-ல் 100-க்கு 38·8 பங்கு அதாவது இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் வரவரக் குறைந்து வருகிறது. எதிரியின் எதிர்ப்பால் பஞ்சமேற்படவில்லை. மிச்சப்படும் கப்பல்கள், அயல் நாட்டில் பிரிடிஷ் நாணயம் பலமாயிருப்பதால், யுத்த தளவாடங்களை வாங்கியேற்றிவர உபயோகிக்கப்படுகின்றன.

## இபின் ஸவுதியைக் கொல்லச் சூழ்ச்சி.

யுனைடட் ஸ்டேட்ஸில் பிரிடிஷ் ஸ்தானிகராயிருந்த பிரபலஸ்தரான லோதியன் பிரபுவைக்கொல்ல பிரிடனே ஏற்பாடு செய்ததாகச் சொன்னதைப் போல், இப்பொழுது இபின் ஸவுதியைக்கொல்ல பிரிடிஷ் ரகஸிய இலாகா பிரயத்தனித்ததாக அச்சுநாடுகள் சொல்லுகின்றன. இபின் ஸவுதி அரசர் பிரிடனுக்கு வேண்டியவர். இவரைக் கொல்ல நினைத்தவர்கள் இப்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதற்குள்ளாகவே இதாலி அவசரப்பட்டுப் பொய்ப் பிரசாரம் செய்வது இதாலியின் பித்தலாட்டத்தைக் காண்பிக்கிறது.

## ஜெர்மன் விமானப்படையின் பலம்.

பிரிடிஷ் விமானப்படையைவிட ஜெர்மன்படை அதிக பலமென்று ஆடம்பரமாய் ஜெர்மனி சொல்லிக்கொள்ளுகிறது (ஜனவரி 2).

6-வருஷங்களாகக் கட்டப்பட்டும், எண்ணிக்கையிலதிகமாயிருந்தும், ஜெர்மன் படையைக் காட்டிலும், பிரிடிஷ் படை மேலாக சண்டை செய்கிறது. பிரிடனில் நடந்த போரில் 1940-ல் ஜெர்மனிக்கு 2,993 விமானங்கள் நஷ்டம்; பிரிடனுக்கு நஷ்டம் 847 தான். மேற்குப் போர்முனையிலும், பிரான்ஸிலும் ஜெர்மனி 945 விமானங்களையிழந்தது; பிரிடனுக்கு நஷ்டம் 375 விமானங்கள்தான்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

## பிரஸங்கம் XXVII.

1941— மணி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி 18, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 19, | ஞாயிற்றுக்கிழமை. | ஆவூர் | ... | காலை | 9.45 |
| | | திருக்கோகர்ணம் | ... | மாலை | 5.30 |
| 20, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | ஆலங்குடி | ... | மாலை | 5.30 |
| | | ராங்கியம் | ... | ,, | 5.30 |
| 21, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.25 |
| | | சேரி பள்ளிக்கூடம் | ... | மாலை | 5 30 |
| | | பெருங்களூர் | ... | ,, | 5.30 |
| | | விராலிமலை | ... | ,, | 5.30 |
| | | பொன்னமராவதி | ... | ,, | 5.30 |
| 23, | வியாழக்கிழமை ... | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 5.30 |
| | | கோனபட்டு | ... | ,, | 5.30 |
| 24, | வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |

## பிரஸங்கம் XXVIII.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 26, | ஞாயிற்றுக்கிழமை. | ராசியமங்கலம் | ... | காலை | 9.45 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 9.45 |
| | | வயலோகம் | ... | ,, | 9.45 |
| 27, | திங்கட்கிழமை ... | விராச்சிலை | ... | மாலை | 5.00 |
| 28, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | புதுப்பட்டி (பொன்னமராவதி). | | மாலை | 5.30 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 5.30 |
| | | ராயவரம் | ... | ,, | 5.30 |
| 29, | புதன்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | கிழாநிலை | ... | மாலை | 5.30 |
| 31, | வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |

# இந்தியாவின்
# பாதுகாப்புக்கு உதவுங்கள்

## பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளை தவறாமல் வாங்குங்கள்.

---

ஒரே சமயம் 10 ரூபாய் கொடுத்து பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டை வாங்க முடியாதவர்களுக்கு இந்தியா கவர்ன் மென்டார் ரூ. 1, அ. 8, 4 விலை பெருமான பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளையும், கார்டுகளையும் வெளியிட்டிருக்கின்றனர். கார்டுகளில் இந்தவிதமான ஸ்டாம்புகளை ஒட்டுவதற்கு இடம் விடப்பட்டிருக்கிறது. 10 ரூபாய் விலை பெருமான ஸ்டாம்புகளை சேர்த்த பிறகு போஸ்டாபீசுக்கு கார்டை எடுத்துக்கொண்டு போய் பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுக்காக கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்.

இந்த விதமான ஸ்டாம்புகளும், கார்டுகளும் சேமிப்பு நிதியை வைத்திருக்கும் எந்த தபாலாபீசிலும் கிடைக்கும்.

பாதுகாப்பு சேமிப்பு கார்டுள்ள ஒவ்வொருவரும் தம் பெயரையும், விலாசத்தையும் கையொப்பம் அல்லது பெருவிரல் குறியையும் ஸ்டாம்புகள் ஒட்டுவதற்கு முன்பு கார்டின்மேல் எழுதவேண்டும். சர்டிபிகேட்டையுடையவர் பாதுகாப்புக்காக இந்த எச்சரிக்கை அவசியம்.

**பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுகள் ரூ. 10, 50, 100, 500 வரையில் கிடைக்கும். 10 வருடங்களின் கடைசியில் 100க்கு 3¼ ரூபாய் வீதம் வட்டிக்கு வட்டியாக வருமான வரி இல்லாமல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ரூ. 13-9-0 ஆக கிடைக்கும். எந்த வழியிலும் சேமிப்பு தொகை குறையாது. ஒவ்வொருவரும் 5000 ரூபாய் வரையில் போடலாம். அருகாமையிலிருக்கும் தபாலாபீசில் விசாரிக்கவும்.**

யுத்த சேமிப்பு இயக்கத்தாரால் வெளியிடப்பட்டது.
தபால் பெட்டி 11, சென்னை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—18-1-41.